# தமிழன்

THAMILAN தமිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 486 பிலவ வருடம், பங்குனி மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை (24.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 20, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## டொலர் விலை 292 ரூபா



02 பக்கம்

## வைத்தியர் ஷாபிக்கு கொடுப்பனவுகளை வழங்கத் தீர்மானம்

மகப்பேற்று மருத்துவர் வைத்தியர் ஷாபி சஹாப்தீன் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட காலப்பகுதியில் வழங்கவேண்டிய அனைத்து சம்பளம் மற்றும் இடைக்கால கொடுப்பனவுகளை வழங்க பொது நிர்வாக அமைச்சின் நிறுவனங்களின் பணிப்பாளர் நாயகம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

02 பக்கம்

### சர்வகட்சி மாநாட்டில்

## நாட்டின் நிலைமை விரிவாக ஆராய்வு

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்டதுடன், பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கான யோசனைகளையும் பல கட்சிகள் முன்வைத்தன.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா மஹஜனக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு, மக்கள் விடுதலைக் கழகம், இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் 11 பங்காளிக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் அப்பே ஜனபல கட்சியின் சார்பாக அத்துரலியே ரத்தன தேரர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

02 பக்கம்

# பொருளாதார நெருக்கடி மேலும் 5 வருடங்களுக்கு!

## அரசியல் பேசும் கூடாரமாக இது அமைந்துவிடக் கூடாது

### சர்வகட்சி மாநாட்டில் ரணில் எச்சரிக்கை



**யோ.தர்மராஜ்**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்க டியிலிருந்து மீள்வதற்கும் எங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் குறைந்தது 5 வருடங்கள் செல்லும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, 5 வருடங்கள் காத்திருக்காது,

பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி உடனடியாக மக்களுக்கு...

02 பக்கம்





அரசாங்கத்தை உடனடியாக பதவி விலகுமாறு கோரி தேசிய மக்கள் சக்தியினரால் நுகேகொடயில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## சர்வகட்சிக் கூட்டத்தில் ரணில்-பெசில் வாய்த்தர்க்கம்

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் விளக்க உரையை ஆற்றிய பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

11 பக்கம்



## மலையக இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவார்கள்

### சோதிக்க வேண்டாமென வடிவேல் சுரேஸ் சபையில் ஆவேசம்

**நா. தினுஷா**

மலையக மக்களின் இருப்புக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. காணிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்றது. இது தேசக் குற்றமாகும். அந்த மக்களை சோதிக்க வேண்டாம். மலையக இளைஞர்களும் ஆயுதம் ஏந்த வேண்டுமா? என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

02 பக்கம்

### கமெண்ட் சுந்தர்..



ஏனுங்கோ...அப்படியே டொலரையும் அச்சடிச்சிட்டா சோலி முடிஞ்சிடுமெல்லே..



இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் பேரவையும் இணைந்து நடத்திய இதழியல் துறைக்கான அதியுயர் விருதுவழங்கும் விழா கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது, லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் தமிழன், அருண மற்றும் த மோர்னிங் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்கள் அதிசிறந்த ஊடகவியலுக்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

(படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

## ப்ளேன் ரீயின் விலை 60 ரூபாவாக உயர்ந்தது

**யோ.தர்மராஜ்**

நாட்டில் பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பினால் ஏராளமான உணவகங்கள் பிளேன் ரீயின் (தேநீரின்) விலையை 60 ரூபாவாக உயர்த்தியுள்ளன.

02 பக்கம்

## கடனை மீளச் செலுத்தும் இயலுமையை இழந்தது நாடு

### அரசியல், பொருளாதார திட்டமிடல்கள் குறித்து சர்வதேச நிபுணர்கள் கவலை

**நமது விசேட செய்தியாளர்**

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் முறையான திட்டமிடல்கள் இல்லாத காரணத்தினால் இலங்கை மிகப்பெரிய கடன்பொறிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச தர நிர்ணய அமைப்புகள், மக்களின் எதிர்காலம் இருளுக்குள் தள்ளப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளன.

02 பக்கம்

## சர்வதேச சட்ட நிறுவனங்களின் அபிப்பிராயங்களைப் பெறுகிறது அரசு!

### கடன் மறுசீரமைப்புக்காக நிதி அமைச்சு நடவடிக்கை

**நமது விசேட செய்தியாளர்**

கடன் மறுசீரமைப்பு தொழில்நுட்ப உதவிக்காக சர்வதேச சட்ட நிறுவனங்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக சர்வதேச சட்ட நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பாக இவ்வாறு அபிப்பிராயங்கள் பெறப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயன்முறைகள் நிறைவடைவதற்கு மூன்று முதல் நான்கு மாத காலம் செல்லும் என எஸ்.ஆர்.ஆட்டிகல வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்




நிமல் லான்சா வகித்துவந்த இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை, ஆளுங்கட்சிக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் எம்.பி. ஒருவருக்கு வழங்க அரச மேல்மட்டத்தில் ஆராயப்படுகிறது.

அவர் அதில் சிக்குவாரா தெரியவில்லை. ஆனால் இப்போது அமைச்சுப் பொறுப்புகளை ஏற்கும் நிலையில் முஸ்லிம் எம்.பிக்கள் இல்லை என்கிறது மற்றுமொரு தகவல்.

## பிரபாகரன் காலத்தில் இல்லாத கஷ்டம் கோட்டாவின் ஆட்சியில்

### சபையில் சிறீதரன் விசனம்



**நா. தினுஷா**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் காலத்தில் கூட நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை உருவாகவில்லை. அவரின் காலப்பகுதியில், மக்கள் வரிசையில் காத்திருக்கவும் இல்லை. வரிசையில் காத்திருந்து உயிரிழக்கவும் இல்லை. ஆனால், பிரபாகரனின் காலத்தில் இடம்பெறாத கஷ்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களுக்கு கொடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்




## வெற் வரியை அதிகரிக்க தீர்மானம்

2002ஆம் ஆண்டு 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (வெற்) சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதிக்கப்பட்டது.

02 பக்கம்

## மோடிக்கான மலையக தமிழர் அபிலாஷை ஆவணம் கையளிப்பு

### மனோ எம்.பி. தலைமையில் இந்தியத் தூதுவரை சந்தித்தது முற்போக்கு கூட்டணி



பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கான, இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் சார்பான அபிலாஷை ஆவணக் கடிதத்தை, தமிழ் முற்போக்கு கூட்டணி,

02 பக்கம்

## தமிழகம் சென்றோரின் உறவினர்களுக்கு மன்னாரில் கடற்படையினர் அச்சுறுத்தல்!

07 பக்கம்

# ‘Asian Digital Finance and Awards’இல் சிறந்த மொபைல் இலத்திரனியல் கொடுப்பனவு முன்னெடுப்பு விருதினை People’s Wave Mobile Banking app வென்றது

People’s Wave Mobile Banking App ஆனது கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற Asian Digital Finance Forum and Awards நிகழ்வின்போது “சிறந்த மொபைல் இலத்திரனியல் கொடுப்பனவு முன்னெடுப்பு” என்ற விருதினை வென்றதுடன் அங்கீகாரமும் பெற்றது.

Asian FinTech Academy (AFTA) ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் தர்மஸ்ரீ குமாரதுங்க, FinTech Association of Sri Lanka (FASL) வின் தலைவர் ராஜ்குமார் கனகசிங்கம் மற்றும் ஜப்பானிய Fintech Association இன் பிரதி தவிசாளர் டகேஷி கிடோ ஆகிய முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். மக்கள் வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு மற்றும் சிரேஷ்ட டிஜிட்டல் அதிகாரி மங்கல காரியவசம்




ஆகியோரும் கலந்து கொண்டனர்.

People’s Wave என்பது ஒரு புரட்சிகரமான மற்றும் இலங்கையில் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒரு அப் ஆகும். 2018ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது முதல் 1 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்கள் இருக்கின்றனர். வங்கியின் முக்கிய அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இந்த அப் ஆனது கிளைக்குச் செல்லாமலேயே வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகள் அல்லது அலுவலகங்களில் இருந்து 50க்கும் மேற்பட்ட வெவ்வேறு வங்கிப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள அனுமதிக்கிறது. பல கணக்குகளின் மீதித் தொகை விசாரணைகள், கடன்கள் மற்றும் கடனட்டைகள், பணக்கொடுப்பனவுகள், பில் கொடுப்பனவுகள், பரிவர்த்தனை வரலாறு, சொந்த அல்லது மூன்றாம் தரப்பு மக்கள் வங்கி அல்லது பிற வங்கிக் கணக்குகளுக்கு நிதி பரிமாற்றங்கள் மற்றும் எதிர்கால திகதியிடப்பட்ட பரிமாற்றங்கள் மற்றும் நிலையாணைகள் உள்ளிட்ட பல பயனுள்ள அம்சங்களை இந்த அப் வழங்குகிறது. மேல் மாகாணத்திற்கு வெளியே 70% க்கும் அதிகமான People's Wave பயனர்களுடன் இந்த அப் ஆனது நிதி உள்ளடக்கத்தை இயக்கும் வங்கியின் பணிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

2015ஆம் ஆண்டில் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டில் ஒரு முன்னோடி பங்கினை வகிக்கிறது. மேலும் இத்தொழிற்றுறையில் முன்னணி டிஜிட்டல் மாற்றப் பயணத்தை வங்கி மேற்கொண்டது. அன்று முதல் மக்கள் வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு மக்கள் வங்கியுடனான அவர்களின் தொடர்புகளின் ஒவ்வொரு கட்டத்திலும் மேம்பட்ட வசதி, வேகம், செயற்றிறன் மற்றும் பாதுகாப்பை வழங்கியுள்ள பலவகைப்பட்ட உலகத்தரம் வாய்ந்த டிஜிட்டல் வங்கியியல் தீர்வுகளை வழங்கி வருகிறது.

மக்கள் வங்கியானது இந்த டிஜிட்டல் நிதிச் சேவைகளை நாட்டின் கிராமப்புற பகுதிகளுக்கும் கொண்டு சென்றதுடன், டிஜிட்டல் சமூகமாக தேசத்தின் பரிணாமத்தை ஆதரிப்பதில் ஒப்பற்ற வெற்றியை அடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Asian FinTech Academy (AFTA) என்பது ஐக்கிய அமெரிக்கா, கொலராடோவில் அமைந்துள்ள சர்வதேச தரநிர்ணய வாரியத்துடன் (International Board of Standards -IBS) இணைந்துள்ளது. இது சர்வதேச ரீதியாக 40 நாடுகளில் செயற்படும் சான்றளிக்கும் அமைப்பாகும். Global Academy of Finance and Management (GAFM) வழங்கிடும் சான்றிதழ்கள் மற்றும் வர்த்தகக்குறியீடுகளை IBS கொண்டுள்ளது.

## பிரபாகரன் காலத்தில்...

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது 2009ஆம் ஆண்டு வரை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது கவலையை தெரிவிக்க முயற்சித்திருந்தார்கள். பிரதமரை சந்திக்க வந்தவர்களை, பஸ்ஸிலிருந்து இறங்கவிடாமல் அவர்கள் தாக்கப்பட்டதை, தாக்கியதை வரலாற்றில் கேவலமான விடயமாகவே கருதவேண்டும். இது கண்டனத்துக்குரிய விடயமாகும்.

இது இன ரீதியானவொரு வேறுபாட்டை காட்டுகிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

சிங்களத் தலைவர்கள் வெட்கப்பட வேண்டும். காரணம் சிங்கள மக்களுக்கு ஒருவகையான சட்டத்தையும் தமிழ் மக்களுக்கு ஒருவகையான சட்டத்தையுமே இந்த அரசாங்கம் கையாளுகிறது. சிங்கள மக்களை உங்களது மக்களாகவும் தமது பிள்ளைகளை இழந்து நீதிக்காக போராடும் தாய்மார்களை இனம் சார்ந்து பார்ப்பது ஏற்றுக்கொள்ள முடியாததும் கண்டனத்துக்குரியதுமான விடயமாகும்.

பொருட்களின் விலை அதிகரித்துள்ளமை மாத்திரமல்லாமல் மக்கள் வரிசையில் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது. மறுபுறம் அரசாங்கம் வினாத்தாள்களை தயாரிக்க தாள்கள் இல்லாமையினால் பரீட்சைகளை நடத்த முடியாது என்கிறது. பத்திரிகை அச்சிடுவதற்கான தாள்கள் இல்லாமல் பத்திரிகை நிறுவனங்கள் பங்கங்களை சுறுக்கியுள்ளன. எரிவாயு, எரிபொருள் என்பன இல்லை. அவற்றுக்காக மக்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் வாழ வழியில்லாமல் எத்தனையோ துன்பங்களை சந்தித்தார்கள். அதேபோல் இப்போது தான் இந்த துன்பங்களை அனுபவிக்க சிங்கள மக்கள் தயாராகி இருக்கிறார்கள். இப்போது தான் வரிசையில் காத்திருக்கிறார்கள். வரிசையில் காத்திருந்து இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளனர். இது இந்த நாட்டுக்கு கேவலமான விடயமாகும்.

பிரபாகரனின் காலத்தில் இந்த நாட்டுக்கு எவ்வளவு நல்லது நடந்தது என்பதை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் சிங்கள மொழியில் கூறுகிறார். அவ்வளவு தூரத்துக்கு அரசாங்கத்தின் பலவீனம் மிக மோசமாகவுள்ளது. பிரபாகரன் காலத்தில் யாரும் பட்டினியால் இறந்ததாக அறிந்தீர்களா? அல்லது யாரும் எரிபொருளுக்காக வரிசையில் இருந்ததாக கேள்விப்பட்டீர்களா? ஆனால், இனப்படுகொலை செய்த கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட சகோதரர்கள் அவ்வாறு நடந்து கொண்டுள்ளனர்.

அதிகாரத்தை பகிர்ந்து சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வை வழங்கி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தயாராக வேண்டும். இதனை செய்ய எந்த சிங்கள தலைமகன் முன்வருகிறானோ அவனே இந்த நாட்டின் மகாமனிதனாக மாறுவான். அவ்வாறான ஒரு தலைவனை தெரிவு செய்ய சிங்கள மக்கள் தயாராக வேண்டும். உங்களுக்கு தலைமை தாங்கக்கூடிய, உங்களை நேசிக்கக்கூடிய, சிங்கள மக்கள் விசுவாசிக்கக்கூடிய ஒருவரை தெரிவு செய்யவேண்டும். அவரே இந்த நாட்டை வழிநடத்துவார் என்றார்.

## ப்ளேன் ரீயின் விலை...

சீனி மற்றும் எரிவாயு உள்ளிட்டவற்றின் விலை உயர்வால் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை, பிளேன் ரீ ஒன்று 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது, 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

உணவுப் பொருட்களின் விலை உயர்வால் உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால் உணவக உற்பத்திகளின் விலையையும் உயர்த்த வேண்டியுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, பால்மாவின் விலை அதிகரிப்பையடுத்து, ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டொலர் விலை...

*நமது நிருபர்*

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 292 ரூபாவாக நேற்று (23) உயர்வடைந்தது. இலங்கை மத்திய வங்கியானது, ரூபாவின் பெறுமதியை நெகிழ்வுத்தன்மையாக்கியதன் பின்னர் தொடர்ச்சியாக அதன் விலை உயர்வடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம், ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் கொள்வனவுப் பெறுமதி 272.06 ரூபாவாகக் காணப்பட்டதுடன் விற்பனைப் பெறுமதி 282.49 ஆகக் காணப்பட்டது. எனினும் சில தனியார் வங்கிகள் அமெரிக்க டொலரின் விற்பனைப் பெறுமதியை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச சட்ட...

இதேவேளை, ஒரு சில சட்ட நிறுவனங்கள் இது தொடர்பில் விபரங்களைப் பெற்றுக்கொள்ள அணுகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த இரண்டு வருடங்களில் அந்நிய செலாவணி கையிருப்பு 70 வீதமாகக் குறைவடைந்து 2.31 பில்லியன் டொலர்களாக இருக்கின்ற நிலையிலும் இவ்வருடத்தில் நான்கு பில்லியன் டொலர்களை கடனாகச் செலுத்த வேண்டிய சூழ்நிலையிலும் இவ்வாறு சட்ட நிறுவனங்களின் அபிப்பிராயங்கள் பெறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடனை மீளச் செலுத்தும்...

மேலும், கடனை மீளச் செலுத்தும் இயலுமையை இலங்கை இழந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர்.

அல்-ஜஸீரா இணையத்தளத்துடன் சர்வதேச நிபுணர்கள் வழங்கிய நேர்காணலின்போதே இது தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைய நாடு என்ற வகையில் இலங்கைக்கான இந்திய நிதியுதவி கட்டாயமானது என ஷிவ் நாடார் பல்கலைக்கழக சர்வதேச தொடர்புகளுக்கான திணைக்களத்தின் இணை பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் கடன் விடயத்தில் இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களின் எதிர்காலம் இருளுக்குள் தள்ளப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளரும் மனித உரிமைகள் சட்டத்தரணியுமான பவானி பொன்சேகா தெரிவித்துள்ளார். ராஜபக்ஷ குடும்பம் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் தன்னிச்சையான தீர்மானங்களை எடுத்ததன் விளைவே இன்றைய நெருக்கடி நிலைமைக்கு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் முறையான திட்டமிடல்கள் இல்லாத காரணத்தினால் இலங்கை மிகப்பெரிய கடன்பொறிக்குள் தள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வெற் வரியை...

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் நேற்று முன்தினம் (22) கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

வரவு செலவுத்திட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட MF/FP/32/CM/2021/212 மற்றும் 2021 டிசம்பர் 14ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிக் கொள்கை முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2022 ஜனவரி 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிதிச் சேவை வழங்கலுக்கு பெறுமதிசேர் வரி 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிக்கப்படும். இதற்கு மேலதிகமாக எந்தவொரு தொற்றுநோய் சூழல் அல்லது மக்களுக்கான அவசர சூழலின் போது அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்படும் வைத்திய உபகரணங்கள் மற்றும் ஔடத நன்கொடைகளுக்கு மாத்திரம் சேர் பெறுமதி வரியிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்கான ஏற்பாடும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டமூலம் இன்று (24) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாட்டில் வரி வசூலிப்பில் அதிகரிப்பு அல்லது குறைப்புச் செய்வதாயின் அது குறித்து பொருளாதார மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அரசாங்க நிதி பற்றிய குழு உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது.

அத்துடன், இலங்கை அரசாங்கத்திற்கும், துருக்கி குடியரசின் அரசாங்கத்துக்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பை நீக்குவதற்கும், வரி செலுத்தாது தட்டிக்கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்குமாக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கும் குழு அனுமதி வழங்கியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான நாலக கொடஹேவா, காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, நளின் பெர்னாண்டோ, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கலாநிதி சுரேன் ராகவன், முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் அரசாங்க அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## மலையக இளைஞர்கள்...

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வீதிகளுக்கு இறங்கி பிச்சை எடுக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கும் சூழ்நிலையில், விவசாயத்தை ஊக்குவிக்கும் நிலை உருவாகியுள்ளது. ஆனால், மலையக மக்களின் விவசாய காணிகளிலிருந்து வெளியேறுமாறு அறிவிப்பு விடுக்கிறார்கள்.

1921ஆம் ஆண்டிலிருந்து காடுகளை பதப்படுத்தி தேயிலை, இறப்பர் என உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக செயற்பட்டு ஆறு தலைமுறைகளாக வாழ்ந்து வரும் மலையக மக்களுக்கு வெளியேற்றி அறிவிப்பு விடுத்து அவர்களை வீதிக்கு இறக்குகிறார்கள்.

மலையக இளைஞர்களும் ஆயுதம் ஏந்த வேண்டுமா? இந்த அரசாங்கமும், பெருந்தோட்ட கம்பனிகளும் மலையக இளைஞர்களை ஆயுதம் ஏந்தவைக்கவா முயற்சிக்கின்றன என்பதை தெளிவுப்படுத்த வேண்டும். இதனை வன்மையாக கண்டிக்கிறேன்.

பெருந்தோட்ட மக்களை அவர்களின் இருப்பிடங்களிலிருந்து நீக்க முடியாது என்ற அனுமதி இருக்கும் நிலையில், அவர்களுக்கு வெளியேற்ற அறிவிப்பை விடுத்து தொடர்ந்தும் மலையக உறவுகளை கஷ்டத்துக்குள்ளாக்கி, மக்களை இந்த அரசாங்கம் வஞ்சித்துக்கொண்டிருக்கிறது.

நாட்டில் விடுதலை புலிகளின் போர் இடம்பெற்ற போதும், மக்கள் விடுதலை முன்னணியின் கலவரங்களின்போதும் மலையக மக்கள் மாத்திரமே இந்த நாட்டை நேசித்தார்கள். நாட்டையும் மண்ணையும் காப்பற்றியவர்களும் மலையக மக்களே. ஆனால், இன்று அவர்களை துன்புறுத்தி, வேதனைப்படுத்தி அவர்களின் இருப்புக்கே இன்று ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனுடைய நோக்கம் என்ன? எதற்காக இவ்வாறு செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அமைச்சு எதற்காக இதற்கெல்லாம் அனுமதிக்கிறது என்று தெரியவில்லை.

மலையக மக்கள் நாட்டை நேசிக்கிறார்கள். அந்த இளைஞர்களை ஆயுதம் ஏந்த ஊக்குவிக்காதீர்கள் என்றார்.

## மோடிக்கான மலையக...

அதன் தலைவர் மனோ கணேசன் தலைமையில் இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் நேற்று கையளித்தது.

கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், உதயகுமார் எம்.பி., கே.டி. குருசாமி, பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்திய தரப்பில் தூதுவர் கோபால் பாக்லே, துணைத்தூதர் வினோத் கே. ஜேகப், அரசியல்துறை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனம் திறந்த கலந்துரையாடலுடன் இந்த சந்திப்பு மிகவும் திருப்திகரமாக அமைந்தது. இலங்கையில் வாழும் தமிழர் சனத்தொகையில் சுமார் சரிபாதியான இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் தொடர்பான கூடிய அக்கறையை செலுத்த பாரத பிரதமர் நரேந்திர மோடியின் இந்திய ஒன்றிய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்த பின்னணியில், இலங்கையின் முழுமைமிக்க குடிமக்களாக ஏனையோருடன் சமத்துவமாக வாழ விரும்பும் மலையக தமிழ் இலங்கையர் தொடர்பான இந்த அதிகாரபூர்வ ஆவணம் மிகவும் பயன்தருகிறது என அவர் மேலும் கூறினார். மலையக தமிழ் மக்களின் அனைத்து அபிலாஷைகளையும் ஒருசேர பிரதிபலிக்கும் கோரிக்கைகள் உள்ளடங்கிய இத்தகைய ஆவணத்தை தயாரித்து முன்வைத்துள்ளமை தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு தனது மகிழ்ச்சிகளையும், பாராட்டுகளையும் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இதன் அபிலாஷை ஆவண கடிதத்தை உடனடியாக பாரத பிரதமர் நரேந்திர மோடியின் அவதானத்துக்கு முறைப்படி அனுப்பி வைப்பதாக தூதுவர் கோபால் பாக்லே, தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவுக்கு உறுதியளித்தார். மேலும் இனிவரும் எதிர்காலத்தில், இந்திய மற்றும் தமிழக அரசியல், சமூக, பரப்புகளில் இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் அதிக கவனத்தை பெற வேண்டும் எனவும், அதற்கான ஒத்துழைப்புகளை இந்த அரசு சார்பில் இந்திய தூதரகம் வழங்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அடுத்த வாரம் இலங்கை வருகைதரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர், தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்திக்கும்போது இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்படும். பிம்ஸ்டெக் மாநாடு முடிந்த உடன், இந்த ஆவண கோரிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாட விரும்புவதாகவும் தூதுவர் கோபால் பாக்லே மேலும் தெரிவித்தார்.

கூட்டணி தலைவர் மனோ கணேசன், இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் கூறியதாவது,

இலங்கையில் வட கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்களுடன் நாம் பிரிக்க முடியாத நல்லுறவு கொண்டுள்ளோம். அவர்களின் இன்னல்களை துடைக்க இந்தியா பலதும் செய்கிறது. அது தொடர வேண்டும். அதேவேளை அதே அக்கறையை எமது மக்கள் மீதும் இந்தியா உட்பட உலகம் காட்ட வேண்டிய வேளை இன்று வந்து விட்டது.

சுமார் பதினைந்து இலட்சம் இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையரில் பத்து விகிதமே தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். ஒட்டு மொத்த மலையக தமிழ் இலங்கையரும் தோட்டத் தொழிலாளர்கள் அல்ல என்பதையும், எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் இந்தியா உட்பட உலகம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை, பத்து விகிதமான சுமார் ஒன்றரை இலட்சம் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களது குடும்ப உறவுகள் மற்றும் தோட்டங்களில் இன்னமும் வாழ்பவர்கள் உள்ளிட்ட சுமார் நான்கு இலட்சம் மக்களே இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய பிரிவினர். அவர்களை கைத்தூக்கி தேசிய மட்டத்துக்கு உயர்த்த இந்தியா, பிரிட்டன் உட்பட உலகத்துக்கு கடப்பாடு இருக்கின்றது. இதை வலியுறுத்தி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி திடசங்கற்பம் பூண்டுள்ளது. எமது உறுதிப்பாட்டை நாம் எந்த சவால்களுக்கும் முகம் கொடுத்து செய்து முடிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வகட்சி மாநாட்டில்...

இங்கு பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

ஏனைய அனைத்து கட்சிகளும் எதிர்காலத்தில் இவ்வாறான மாநாட்டில் கலந்துகொண்டு தங்களுடைய யோசனைகளை முன்வைத்து, நாட்டின் எதிர்காலத்துடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். எனவே, இப்பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ளவும் பொறுப்புள்ளது. எனவே, அனைவரும் இணைந்து பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். எமது அழைப்பை பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் புறக்கணித்துள்ளபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. அவர்களிற்கு விசேடமாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன்" எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாங்கள் இன்று முகம் கொடுக்கும் பொருளாதார நெருக்கடியானது பாரிய பிரச்சினை என்பது முழு உலகமும் அறிந்ததே. கொரோனாவால் பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று நாங்களும் பாதிக்கப்பட்டுள்ளோம். 2015 – 2019 காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்ததுடன், கடன் சுமையும் அதிகரித்தது. ஏப்ரல் தாக்குதலுக்கு பின்னர் சுற்றுலாத்துறை முற்றாக சீர்குலைந்தது. இதனால், பொருளாதார நெருக்கடிகளுக்கு நாடும் மத்திய வங்கியும் முகங்கொடுக்க நேரிட்டது. நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளித்த மத்திய வங்கி ஆளுநர் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

“வடக்கு, கிழக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அதிக வாக்கு கிடைக்கவில்லை. எனினும், வடக்கு கிழக்கில் அதிக வாக்கு பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்முடன் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சியளிக்கிறது. அனைத்து தரப்பினரும், இணக்கம் கண்டால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு எமது ஆட்சிக்காலத்தில் தீர்வை காணத் தயாராக இருக்கிறோம்” என நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார். வடக்கு, கிழக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அதிக வாக்கு கிடைக்கவில்லை. எனினும், வடக்கு கிழக்கில் அதிக வாக்கு பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்முடன் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சியளிக்கிறது. அனைத்து தரப்பினரும், இணக்கம் கண்டால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு எமது ஆட்சிக்காலத்தில் தீர்வை காணத் தயாராக இருக்கிறோம் என கூட்டத்தின் இறுதியில் உரையாற்றிய நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக பிரச்சினைகளை பிரச்சினைகள் என தெரிவிக்காதிருப்பது பொருத்தமற்றது. இந்த நிலைமைக்கு மத்தியில் சர்வகட்சி மாநாடானது, அதற்குதீர்வை தேடுவதற்கானதாகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

## வைத்தியர் ஷாபிக்கு...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன ஆஜராகியிருந்தார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சந்தன கெடங்கமுவவினால் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை செல்லுபடியாக்குமாறு கோரி மகப்பேறு மருத்துவர் வைத்தியர் ஷாபி சஹாப்தீன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த போதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சந்தன கன்டங்கமுவ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## பொருளாதார நெருக்கடி...

மானியம் வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (23) இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துகளையும் யோசனைகளையும் முன்வைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகளினால் கடந்த இருவருடங்களில் திறந்த பொருளாதாரத்தினால் உருவாக்கப்பட்ட மத்திய தர வர்க்கத்தினர் மீண்டும் வீழ்ச்சியடைய தொடங்கியுள்ளதை காண முடிகின்றது.

திறந்த பொருளாதாரக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திகள், விநியோகங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயத்துறை சீர்குலைந்துள்ளதுடன், அதன் திட்டமிடல் தொழில்களும் பாதிப்படைந்துள்ளன. இந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக சிறிய மற்றும் நடுத்தர வர்க்க விவசாயிகளில் 25 வீதமானவர்கள் தங்களுடைய விவசாயத்தை முற்றாக கைவிட்டுள்ளனர். இதனால் வேலையின்மை மற்றும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதால், வறுமை மற்றும் மந்த போசனையும் அதிகரித்துவருகின்றது. நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் நாட்டின் கடன் சுமையானது 119 வீதமாக அதிகரித்துள்ளது.

இலங்கை இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் எங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் குறைந்தது 5 வருடங்கள் செல்லும் என்பதால், பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி உடனடியாக மக்களுக்கு மானியம் வழங்க வேண்டும் என்பதே எங்களுடைய முதன்மை செயற்பாடாகும். 5 வருடங்கள் காத்திருக்காது, மக்களுக்கு எவ்வாறான மானியங்களை வழங்க முடியும் என்பதை கண்டறிந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொருளாதாரக் கொள்கையை மீள பெற்றுக்கொண்டமையால் தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களும் நம்பிக்கையிழந்துள்ளனர். முதலீட்டாளர்கள் இல்லாது எங்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. மேலும், இளையத் தலைமுறையினரும் நாட்டை விட்டு வெளியேறிவருகின்றனர். பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட பிரகடனம் ஒன்றிருப்பின் மாத்திரமே பாதிப்புகளிலிருந்து மீள முடியும்.

இந்த கொள்கைகளுக்கு அமைய நாங்கள் ஆட்சியை மாற்றாவிட்டால் முதலீட்டாளர்கள் வருகைதரவும் மாட்டார்கள், கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்கவும் மாட்டார்கள்.

நாட்டுக்கான குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக நாடாளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகள் தேசிய பிரகடனத்திற்கு வர வேண்டும். வெளிப்படை பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, அரசாங்கத்தினால் கட்டுப்பாடுகள் மற்றும் அர்ப்பணிப்புகளை முன்னெடுப்பதாக எங்களுக்கு தெரியவில்லை. அது தொடர்பான அறிக்கையையும் எங்களால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக பல முறை உறுதியளிக்கப்பட்ட போதிலும், அதனை சமர்ப்பிக்க தவறியுள்ளனர். இதனாலேயே இன்று பல கட்சிகள் சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்துள்ளனர் - என்றார்.

# இந்த புது வருட காலத்தில் அதிகப்படியான விலைக் கழிவுகள்

60% வரையான கழிவுகள்

People's கடன் அட்டையில் 60% வரையான நம்ப முடியாத கழிவுகளை அனுபவித்திடுங்கள்

## Leisure

**Up to 60%**

- Tea Plant Nuwara Eliya – Credit: 60%, Till 31st March, 0772020212 / 0772304477
- Amaara Sky Hotel Kandy – Credit: Up to 60%, Debit: Up to 60%, Till 30th April, 0774778315 / 0812239888
- Amaara Forest Hotel Sigiriya – Credit: Up to 60%, Debit: Up to 60%, Till 30th April, 0770038311 / 0662277277

**Up to 55%**

- Arie Lagoon Negombo – Credit: Up to 55%, Debit: Up to 55%, Till 30th April, 0317745745 / 0114327818

**Up to 50%**

- Aarya Lagoon Kalpitiya – Credit: Up to 50%, Till 30th April, 0777509000
- Apa Villa Thalpe – Credit: Up to 50%, Debit: Up to 50%, Till 30th April, 0779594545 / 0113663699
- Era Beach Thalpe – Credit: Up to 50%, Debit: Up to 50%, Till 30th April, 0779594545 / 0113663699
- Joe's Resort Unawatuna – Credit: Up to 50%, Debit: Up to 50%, Till 30th April, 0779594545 / 0113663699
- Turyaa Kalutara – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Negombo – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Tea Factory (Kandapola) – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Kandalama – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Heritance Ahungalla – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Amethyst Resort Passikudah – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Earl's Regency (Kandy) – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Earl's Regent Kandy – Credit: Up to 50%, 15th March to 15th April (Online Booking Only)
- Sooriya Resort & Spa (Tangalle) – Credit: 50%, Till 31st March, 0769484434 / 0763484431, 0763484439
- Hikkaduwa Beach Hotel (Hikkaduwa) – Credit: 50%, Debit: 50%, Till 30th April, 0770136481
- Melheim Beach Kalpitiya – Credit: 50%, Debit: 50%, Till 30th April, 0702354466
- Melheim Resort Haputale – Credit: 50%, Debit: 50%, Till 30th April, 0702354466
- Melheim Kandy – Credit: 50%, Debit: 50%, Till 30th April, 0702354466
- Range Kandy – Credit: 50%, Debit: 50%, Till 30th June, 0770258258
- Sky Pavilion (Kandy) – Credit: 50%, Debit: 50%, Till 30th June, 0770258258
- Randholee Resorts (Kandy) – Credit: 50%, Debit: 50%, Till 30th June, 0812217741 / 0812217742 / 0812217743
- Royal Hills Nuwara Eliya – Credit: Up to 50%, Debit: Up to 50%, Till 30th April, 0771106327 / 0522224219
- Uga Bay (Passikudah) – Credit: 50%, 21st to 23rd March, 0115671000
- Uga Jungle Beach (Trincomalee) – Credit: 50%, 21st to 23rd March, 0115671000
- Ahaspokuna Bush Walks Camp Belihuloya by Eco Team (Belihuloya) – Credit: 50%, Till 30th April, 0710662202
- Big Game Camps & Lodges by Eco Team (Yala/Udawalawe/Wilpattu) – Credit: 50%, Till 30th April, 0710662202
- Mahoora Tented Safari Camps by Eco Team (Yala/Udawalawe/Wilpattu) – Credit: 50%, Till 30th April, 0710662202
- Seerock The King's Domain (Sigiriya) – Credit: 50%, Till 30th April, 0664545242, 0768274726
- The Glenrock Upstream Belihuloya – Credit: 50%, Till 31st March, 0769205305
- Occidental Paradise Dambulla – Credit: 50%, Debit: 50%, 15th March to 31st May (Online Booking – Promo Code-PEB22), 0662286300

**45%**

- The Long Beach Resort & Spa (Koggala) – Credit: 45%, Debit: 45%, Till 30th April, 0711543236 / 0711555805, 0912282830
- Koggala Beach Hotel (Koggala) – Credit: 45%, Debit: 45%, Till 30th April, 0711543236 / 0711555805, 0912282830
- Ranweli Holiday Village (Waikkal) – Credit: 45%, Till 30th April, 0771096739 / 0312276390

**Up to 40%**

- Kingdom Secret (Kiriella) – Credit: 40%, Debit: 40%, Till 30th April, 0719474536 / 0653649999
- Giman Free (Passikudah) – Credit: 40%, Debit: 40%, Till 30th April, 0719474536 / 0653649999
- Elephas Resort Sigiriya – Credit: 40%, Till 31st March, 0763157330 / 0662054111, 0662054112
- Malu Malu Resorts & Spas Passikudah – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- The Other Corner Habarana – Credit: 40%, Debit: 40%, Till 31st May, 0773327995 / 0117399500
- Tea & Experience Factory Mandaramnuwara – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Amagi Beach (Marawila) – Credit: 40%, Debit: 40%, Till 30th April, 0703569175
- Galway Heights Nuwara Eliya – Credit: Up to 40%, Debit: 30%, Till 31st March, 0522030400 / 0760978884
- The Rain Tree (Thissamaharama) – Credit: 40%, Debit: 40%, Till 31st May, 0715597641 / 0472238125
- Sigiriya Kingdom Gate (Dambulla) – Credit: 40%, Debit: 40%, Till 30th April, 0777429000
- Aliya Resort & Spa Sigiriya – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Sungreen Resort & Spa Habarana – Credit: 40%, Till 30th June, 0768055050 / 0667634000
- Scottish Planter Glendevon Bungalow (Nuwara Eliya) – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Amagi Aria (Negombo) – Credit: 40%, Debit: 40%, Till 30th April
- Parangi Weligama Bay (Weligama) – Credit: 40%, 16th & 17th March, 0774038168 / 0772930643
- Wild Glamping Gal Oya – Credit: 40%, 16th & 17th March, 0774038168 / 0772930643
- Wild Glamping Knuckles – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Mountbatten Bungalow Kandy – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)
- Kithala Resort Thissamaharama – Credit: 40%, 16th & 17th March (Promo Code – PB22) (Online Booking Only)

**40%**

- Sigiriya Jungles (Sigiriya) – Credit: 40%, Debit: 40%, Till 30th April, 0664508508 / 0114508508

**Up to 35%**

- EKHO Surf Bentota – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0115585858, 0772387777
- EKHO Sigiriya – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0115585858, 0772387777
- EKHO Ella – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0115585858, 0772387777
- EKHO Safari Tissa (Tissamaharama) – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0115585858, 0772387777
- EKHO Lake House Polonnaruwa – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0115585858, 0772387777
- Rajarata Hotel (Anuradhapura) – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0770029168
- Tropical Life Resort & Spa Dambulla – Credit: 35%, Debit: 35%, Till 30th April, 0662030300 / 0777225151
- Sennya Resorts Belihuloya – Credit: 35%, Debit: 35%, Till 30th April, 0773138844
- Orient Hotel Bandarawela – Credit: 35%, Debit: 35%, Till 30th April, 0777825473 / 0776475694, 0112422441 / 0572222407
- Stay at Ahangama – Credit: Up to 35%, Debit: Up to 35%, Till 30th April, 0777353130
- Handun villas (Talalla) – Credit: 35%, Debit: 35%, Till 31st March, 0414933016
- Insight Resort (Ahangama) – Credit: 35%, Debit: 35%, Till 30th April, 0912283296 / 0912283568, 0912283569, 0768900717
- Queen's Hotel Kandy – Credit: 35%, Till 31st March, 0115585858, 0772387777
- Hotel Suisse (Kandy) – Credit: 35%, Till 31st March, 0115585858, 0772387777

**Up to 30%**

- Cassandra Culture Resort (Sigiriya) – Credit: 30%, Debit: 30%, Till 31st March, 0664933636
- Lavenro Hotel & Resort (Deniyaya) – Credit: 30%, Debit: 30%, Till 30th June, 0713324056
- Lavish Resort Sigiriya – Credit: 30%, Debit: 30%, Till 30th November, 0764432442
- Yulu 77 Resorts Anuradhapura – Credit: 30%, Debit: 30%, Till 30th November, 0764432442
- Heavens Gate Resort Kandy – Credit: 30%, Debit: 30%, Till 30th November, 0764432442
- Glory Bush Boutique Villa Nuwara Eliya – Credit: 30%, Debit: 30%, Till 30th November, 0764432442
- Anilana Hotels & Resorts Passikudah – Credit: 30%, Till 31st May, 0112030900, 0773209041
- Cottage 42 Nuwara Eliya – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236
- Birds Park (Polgahawela) – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236
- Dream Lodge (Hanthana) – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236
- Gedara Villa Kalutara – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236
- South Lake Resorts (Koggala) – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236
- Sathmin Villa (Ahangama) – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236
- Lavendish Wild Safari (Wasgamuwa) – Credit: Up to 30%, Till 14th July (Blackout Period 11th to 20th April), 0753941941
- Lavendish Miridiya Lake Resort (Anuradhapura) – Credit: Up to 30%, Till 14th July (Blackout Period 11th to 20th April), 0252222112
- Lavendish Country Resort (Dambulla) – Credit: Up to 30%, Till 14th July (Blackout Period 11th to 20th April), 0753555946
- Lavendish Grand Tamarind Lake (Yala) – Credit: Up to 30%, Till 14th July (Blackout Period 11th to 20th April), 0753556039
- Lavendish Ohrin Hotel (Kataragama) – Credit: Up to 30%, Till 14th July (Blackout Period 11th to 20th April), 0753556044
- Villa Indrasiriya Ahangama – Credit: 30%, Debit: 30%, Till 30th April, 0914944500 / 0766857236

**Up to 25%**

- Hotel Alakamanda (Anuradhapura) – Credit: Up to 25%, Till 30th April, 0255620277 / 0777790511
- Grand Royal Pinnalanda (Rambukkana) – Credit: 25%, Debit: 25%, Till 30th April, 0352265297

**20%**

- Hotel Elephant Bay (Rambukkana) – Credit: 20%, Till 31st December, 0777432025 / 0352266731 / 0352262352
- 88th Ella – Credit: 20%, Debit: 20%, Till 31st March, 0769904480
- 88th Hanthana – Credit: 20%, Debit: 20%, Till 31st March, 0769904480

**Up to 15%**

- Thisew Nillambe (Kandy) – Credit: Up to 15%, Debit: Up to 15%, Till 31st March, 0771207330

**Up to 10%**

- Sigiriya King's Resort (Sigiriya) – Credit: 10%, Debit: 10%, 15th March to 15th July, 0771366167
- Palmstone Retreat (Kithulgala) – Credit: 10%, Debit: 10%, Till 31st March, 0767993199
- Wildescape Buttala – Credit & Debit: Up to 10%, Savings for reservation of entire bungalow for 2 or more nights, Till 30th April, 0114508508
- Lady Hill Galle – Credit: 10%, Debit: 10%, Till 30th April, 0763609843
- Redwood Falcon Cabins (Nuwara Eliya) – Credit: 10%, Debit: 10%, Till 31st March, 0723339740
- Redwood Hollow Cabins (Nuwara Eliya) – Credit: 10%, Debit: 10%, Till 31st March, 0723339740
- Leaf Olu Ella (Yatiyanthota) – Credit: 10%, Till 31st December, 0772926716 / 0776289051
- Leaf Watagala (Ruwanwella) – Credit: 10%, Till 31st December, 0772926716 / 0776289051
- Stratford Cottage (Nuwara Eliya) – Credit: 10%, Till 31st December, 0772926716 / 0776289051
- Wild Grass Nature Resort (Sigiriya) – Credit – DBL FB – Rates start at LKR 14,000/- per person per night sharing double on weekdays and LKR 15,000/- per person per night on weekends double sharing, Till 31st March, 0771788487 / 0664935577 / 0662286866
- The Calm Resort & Spa Pasikuda – Credit – LKR 8,000/- nett per person on FB Basis, Till 31st March, 0652050370 / 0114626626
- Temple Tree Resort & Spa (Bentota) – Credit & Debit: SGL FB – 14,500/-, SGL HB – 13,500/-, DBL FB – 17,250/-, DBL HB – 15,000/-, TPL FB – 20,250/-, TPL HB – 17,500/-, Till 30th April, 0716267843 / 0342270700

## Clothing

**Up to 40%**

- Beverly Street – Credit: Up to 40%, Debit: Up to 30%, 26th & 27th March (On Selected Items)

**Up to 35%**

- Hugo Boss – Credit: Up to 35%, 15th March to 15th April (On Selected Items)
- Under Armour – Credit: Up to 35%, 15th March to 15th April (On Selected Items)

**30%**

- Kelly Felder – Credit: 30%, Debit: 20%, 18th & 19th March
- The Factory Hub – Credit: 30%, Debit: 15%, 26th, 27th & 28th March
- Amante – Credit: 30%, Debit: 10%, 27th & 28th March
- The Brands Warehouse – Credit: 30%, Debit: 15%, 24th, 25th & 26th March
- Cotton & Thread – Credit: 30%, Debit: 20%, 18th, 19th & 20th March
- Aditi Infinity – Credit: 30%, Debit: 20%, 4th & 5th April
- Sunimal's – Credit: 30%, Debit: 15%, 9th & 10th April

**25%**

- Spring & Summer – Credit: 25%, Debit: 10%, 26th & 27th March
- Nils Store – Credit: 25%, 7th & 8th April
- Dilly & Carlo – Credit: 25%, Debit: 10%, 27th & 28th March
- Hi Life – Credit: 25%, Debit: 10%, 4th, 5th & 6th April
- Chamathkara – Credit: 25%, Debit: 25%, 15th March to 30th April
- Iris – Credit: 25%, 7th & 8th April
- Fashion Enuli – Credit: 25%, Debit: 10%, 24th & 25th March
- Queen Nithijaya – Credit: 25%, Debit: 25%, 15th to 18th March
- Molly Boulevard – Credit: 25%, Debit: 10%, 28th, 29th & 30th March
- The Factory Outlet – Credit: 25%, Debit: 10%, 19th, 20th March & 16th, 17th April
- Arista – Credit: 25%, Debit: 10%, 8th & 9th April
- Double XL – Credit: 25%, Debit: 15%, 31st March & 1st April
- Velona – Credit: 25%, Debit: 10%, 8th & 9th April
- Chenara Dodge – Credit: 25%, Debit: 15%, 3rd & 4th April
- Saree Mandir – Credit: 25%, Debit: 15%, 1st, 2nd & 3rd April
- Nithijaya Saree Fashion – Credit: 25%, Debit: 25%, 15th to 18th March
- Sarathchandra Textiles – Credit: 25%, Debit: 10%, 2nd & 3rd April
- Saman Mal – Credit: 25%, Debit: 15%, 27th March & 3rd, 7th April (Min. bill value Rs. 5,000/-)
- Kreation – Credit: 25%, Debit: 15%, 17th to 20th March
- Damro Diliganz – Credit: 25%, 7th & 8th April
- Shopimo – Credit: 25%, Debit: 10%, 19th & 20th March
- Jump Clothing – Credit: 25%, Debit: 10%, 30th March to 1st April
- The Kids Warehouse – Credit: 25%, Debit: 15%, 31st March to 1st April
- House of Fashions – Credit: 25%, 20th, 27th March & 7th, 10th April
- Nora Reed – Credit: 25%, Debit: 10%, 10th, 11th & 12th April
- E Friends – Credit: 25%, 30th & 31st March
- Emerald – Credit: 25%, 1st, 2nd & 3rd April (Only for Battaramulla Outlet)
- Adidas Exclusive – Credit: 25%, 24th & 25th March (Racecourse Mall, KCC & Pelawatte)
- Envoy Mansion – Credit: 25%, 24th & 25th March
- Hameedia – Credit: 25%, 24th & 25th March
- Envoy London – Credit: 25%, 24th & 25th March
- Signature – Credit: 25%, 24th & 25th March

**20%**

- Haamaa – Credit: 20%, Debit: 10%, 1st & 2nd April
- CIB Shopping Centre – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Claire's Closet – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- CIB Curtains – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Cool Planet – Credit: 20%, Debit: 10%, 15th & 16th March
- Wijaya Saree Mandir – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Nirmani Dress Point – Credit: 20%, Debit: 10%, 26th & 27th March
- New Manel – Credit: 20%, Debit: 10%, 1st & 2nd April
- Wijaya House of Tailors – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Fashion Bug – Credit: 20%, 4th & 5th April
- Piyarathna Tex – Credit: 20%, Debit: 10%, 28th & 29th March
- Prasad Fashion Square – Credit: 20%, Debit: 10%, 18th & 19th March
- Arienti – Credit: 20%, 27th March
- G C S Fashions (Polonnaruwa) – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Supul Collection – Credit: 20%, 19th & 20th March
- Little Things – Credit: 20%, 9th & 10th April
- Gayan Inlook – Credit: 20%, 2nd & 3rd April
- Thilakma Fashion – Credit: 20%, 7th & 8th April
- Uptown Kandy – Credit: 20%, 26th & 27th March
- Nolimit – Credit: 20%, 29th & 30th March (On Selected Items)
- Glitz – Credit: 20%, 29th & 30th March (On Selected Items)
- Mimosa – Credit: 20%, Debit: 10%, 5th, 6th & 7th April
- Nick Nack – Credit: 20%, Debit: 10%, 15th & 16th March
- Inter Fashion – Credit: 20%, 27th March & 2nd April
- The Vanta Studios – Credit: 20%, Debit: 10%, 5th, 6th & 7th April
- ASB Fashion – Credit: 20%, Debit: 7.5%, 30th & 31st March
- Handloom Gallery – Credit: 20%, Debit: 10%, 26th, 27th March & 6th, 7th April
- Sriyani Dress Point – Credit: 20%, 2nd & 3rd April
- Will by Zac – Credit: 20%, 9th & 10th April
- Zuzi – Credit: 20%, Debit: 10%, 29th & 30th March
- MACS – Credit: 20%, 2nd & 3rd April
- Exibit – Credit: 20%, Debit: 10%, 15th & 16th March
- I.O.A.K – Credit: 20%, 8th to 12th April
- Level Outfitters – Credit: 20%, Debit: 15%, 11th & 12th April
- Classy Collection – Credit: 20%, Debit: 10%, 4th & 6th April
- Rich Look – Credit: 20%, Debit: 10%, 26th & 27th March
- Krish Fashion – Credit: 20%, 26th & 27th March
- Galle City Stores (Polonnaruwa) – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Sting Clothing – Credit: 20%, Debit: 10%, (CCC & OGF Mall) 4th & 5th April
- Prasad Textiles – Credit: 20%, Debit: 10%, 18th & 19th March
- Urban Go – Credit: 20%, 18th to 20th March
- GMT – Credit: 20%, (Excluding Jockey & Speedo) 18th to 20th March
- Urban Trendz – Credit: 20%, 18th to 20th March
- United Colors of Benetton – Credit: 20%, 18th to 20th March
- Super Fashion (Panadura) – Credit: 20%, Debit: 10%, 18th & 19th March
- Kadapatha – Credit: 20%, 23rd, 24th March & 4th, 5th April
- Cotton Island – Credit: 20%, Debit: 10%, 20th to 22nd March
- Emma Fashion – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Piyara Fashion – Credit: 20%, Debit: 10%, 26th & 27th March
- RV Fashion – Credit: 20%, Debit: 10%, 2nd & 3rd April
- Athukorala Textiles – Credit: 20%, Debit: 10%, 15th, 16th & 17th March

**15%**

- Choice Park – Credit: 15%, Debit: 10%, 26th March
- Kreation – Credit: 15%, Debit: 15%, 4th to 7th April

**10%**

- Nils Store – Credit: 10%, 16th & 17th March

## Supermarkets

**Up to 25%**

- Cargills – Credit: 25% off on Fresh Vegetables, Fruits & Seafood, Till 30th June on Every Tuesday & Thursday (Exclude from 1st to 10th April), Debit: 10% off for Fresh Vegetables, Fruits & Seafood, Till 31st March (Every Tuesday & Thursday), Min. Bill Value – Rs. 2,000/- (Cargills Food City Outlets) & Rs. 1,500/- (Cargills Express Outlets), Max. Discount Per Transaction is Rs. 1,000/-, Max. quantity of 5kg per item
- Keells – 25% off on fresh vegetables, fruits & seafood, Till 30th June (Every Monday & Wednesday) for bills over Rs. 3,000/-, Max. Discount per bill – Rs. 1,000/-

**10%**

- Softlogic Glomark – 20% off on total bill value, Till 30th June (Every Saturday), Min. Total Bill Value to be eligible – Rs. 5,000/-, Max. Bill Value – Rs. 10,000/-, Max. Discount per transaction – Rs. 2,000/-, Max. 3 units / 3kg per product
- Laugfs Super – 10% off on total bill value, Till 30th June (Every Sunday), Min. Bill Value – Rs. 2,500/-, Max. Discount per Transaction is Rs. 1,000/-, Max. quantity of 5 units/5kg per item
- Arpico – 10% off on total bill value at Arpico Supercentre, Superstore & Arpico Daily, Till 30th June (Every Friday) for bills over Rs. 5,000/-, Max. Discount Per Bill – Rs. 1,500/-

## Shoes & Leather

**Up to 35%**

- Skechers – Credit: Up to 35%, 15th March to 15th April (On Selected Items)

**25%**

- Helanka – Credit: 25%, Debit: 10%, 7th & 8th April
- Bata – Credit: 25%, 9th to 13th April

**20%**

- K+ by Helanka (Kurunegala) – Credit: 20%, Debit: 10%, 21st & 22nd March

**15%**

- DSI – Credit: 15%, Debit: 10%, 11th & 12th April (DSI, DSI Franchise & Factory Outlets)

**10%**

- Saffans – Credit: 10%, 12th & 13th April

Terms & conditions apply

www.peoplesbank.lk

1961 People's Bank Call Centre

People's Bank — Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 24ஆம் திகதி, வியாழக்கிழமை

# எப்போது நீங்கும் தமிழர் துயர்!

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் உயிருக்குப் பயந்து அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்த நிலையில், தற்போது பட்டினிச்சாவுக்கு பயந்து நடுக்கடலில் சுமார் 37 மணிநேரம் உயிருக்குப் போராடி குழந்தைகளுடன் தனுஷ்கோடி வந்துசேர்ந்ததாக மன்னாரிலிருந்து அகதிகளாக சென்றுள்ள இலங்கைத் தமிழர்கள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தட்டுப்பாடாக மாறியுள்ளன. விலைவாசிகள் மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் ஏறிக்கொண்டிருக்கிறது.

குழந்தைகளுக்கான பால்மா, அரிசி, பருப்பு, கோதுமை மா, மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் உள்ளிட்ட பொருட்களின் கடும் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் வாழும் மக்கள் தமிழகத்திற்கு அகதிகளாக படகுகள் மூலம் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்கரையிலிருந்து தமது சொந்த கண்ணாடி இழைப்படகில் ஐந்து குழந்தைகள், மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் என வவுனியாவைச் சேர்ந்த இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் தனுஷ்கோடிக்கு புறப்பட்டுள்ளனர்.

நடுக்கடலில் படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக கடும் வெயிலில் உணவு, தண்ணீரின்றி சுமார் 37 மணி நேரத்திற்கும் மேலாக குழந்தைகளுடன் நடுக்கடலில் தத்தளித்த நிலையில் பல மணிநேர முயற்சிக்குப் பின் இயந்திரம் சரிசெய்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் தனுஷ்கோடி வடக்கு பாலம் மீன்பிடித் துறைமுகத்தை சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்த காலங்களில் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து உயிர் பிழைத்தால் போதும் என 1990ஆம் ஆண்டு தமிழகத்திற்கு அகதிகளாக வந்து போர் முடிந்த பின் 2012இல் மீண்டும் இலங்கைக்கு புறப்பட்டு சென்றிருந்தனர்.

தற்போது உணவு பஞ்சத்தால் பட்டினிச்சாவுக்கு பயந்து குழந்தைகளோடு மீண்டும் இரண்டாவது முறையாக அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளதாகவும், இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் பல ஆயிரக்கணக்கானோர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சமடைய உள்ளதாகவும், எரிபொருள் தட்டுப்பாட்டால் வரமுடியாமல் அவதியுற்று வருவதாக் தமிழகத்திற்கு அகதிகளாக சென்றுள்ள வவுனியாவைச் சேர்ந்த தமிழர்கள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.


தொடர்ந்து செவ்வாய்க்கிழமை காலைமுதல் இரவுவரை 16 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடிக்கு சென்றுள்ளனர். மேலும் சிலர் அகதிகளாக தனுஷ்கோடிக்கு வரக்கூடும் என்பதால் சர்வதேச கடல் எல்லை பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்த கடல் பாதுகாப்பு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கையின் பொருளாதார நிலை மேம்பட இந்தியா உதவிகளை செய்தாலும், அது கீழ்த்தட்டு மக்களை சென்றடைய சில காலம் பிடிக்கும் என்றே தெரிகிறது. மூன்று தசாப்த கால உள்நாட்டு சண்டை நடந்த காலங்களில்கூட இப்படியான நிலைமை இருந்ததில்லை. தினந்தோறும் எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசைகளில் நிற்கும் நிலைமை. அரசாங்கத்தை திட்டித் தீர்க்காத ஆட்களே கிடையாது. அதிலும் பொருட்களை வாங்க வரிசைகளில் நிற்கும் முதியவர்கள் உயிரிழக்கும் நிலைமை. மின்வெட்டு காரணமாக தொழிற்துறை பாதிப்பு, மருந்துகள் தட்டுப்பாடு என்று திரும்பும் பக்கமெல்லாம் பிரச்சினைகள்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு இந்த நிலைமை மேலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் உயிரையும் துச்சமாக மதித்து கடற்பயணத்தினை மேற்கொண்டு தமிழகம் செல்லத் துணிந்துள்ளனர் இந்த மக்கள்.1983ஆம் ஆண்டு இனக்கலவரம் இலங்கையில் நடைபெற்றபோது பெருமளவிலான தமிழர்கள் தமிழகத்திற்கு சென்றனர். இப்போதும் அவ்வகையான நிலைமை ஏற்படுமோ என்ற அச்சமே ஏற்பட்டுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை என்ன நடந்தாலும் அதில் அதிகம் பாதிக்கப்படுவது தமிழர்கள்தான். தமிழர்களின் துயரம் எப்போது நீங்குமென்பது கடவுளுக்கே வெளிச்சம்!

# காசநோயையும் குணப்படுத்தலாம்!





4,000 ஆண்டுகளுக்கும் மேலாக மனிதர்களிடம் காணக்கூடிய கிருமி மைக்ரோபக்டீரியம் டியூபர்கலோசிஸ்.

எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட மம்மிகளின் முதுகெலும்புத் தொடரை ஆராய்ந்தபோது அதில் ரி.பி. கிருமி இருந்திருக்கிறது. பொதுவாக ஆசியர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்கும் ரி.பி. கிருமி எதிர்ப்புச் சக்தி குறைவாகவே உள்ளது. இதனால் பல நூற்றாண்டுகளாக இந்தக் கிருமி நம்மை ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் ஒன்பது மில்லியன் (90 இலட்சம்) காச நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். இவர்களில் 30 இலட்சம் பேர் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் போய்விடுகின்றனர். இந்த 30 இலட்சம் பேரைக் கண்டறிந்து, சிகிச்சை அளித்து, குணப்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் உலக காச நோய் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது..

நகம், முடியைத் தவிர எல்லா இடத்திலும் ரி.பி. கிருமி தாக்கும். ஆனால், நுரையீரலில் பாதிப்பை ஏற்படுத்தும்போதுதான் அது மற்றவர்களுக்கும் பரவுகிறது. காச நோய்க் கிருமியானது இருமல், தும்மல், சுவாசம், பேசுதல் மூலமாகப் பரவுகிறது. எவ்வளவு விரைவாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கிறோமோ, அந்தளவுக்கு அந்த நோயாளிக்கும் சமூகத்துக்கும் நல்லது.

இரண்டு வாரத்துக்கு மேல் காய்ச்சல், இருமும்போது சளியுடன் இரத்தம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

நுரையீரல் காச நோய் உள்ள நோயாளி தும்மும்போதும், இருமும்போதும் கிருமியானது பரவுகிறது. இப்படி பரவும் கிருமி அடுத்தவர் நுரையீரலுக்குச் செல்கிறது. அவருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாக இருந்தால் நுரையீரலிலேயே தங்கிவிடுகிறது. ஒருவேளை அவருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருந்தால், அது நோயாக உருவெடுத்து பாதிப்பை ஏற்படுத்துகிறது.

சளி சிறுசிறு நீர்த் திவலைகளாக காற்றில் பரவுகிறது. ஒரு நீர்த் திவலையில் ஆயிரக்கணக்கான கிருமிகள் இருக்கும். திவலையின் அளவு 5 மைக்ரொனுக்கு கீழ் இருந்தால், காற்றில் மிதக்கும். நுரையீரல் வரை சென்று வெளியே வந்துவிடும்.10 மைக்ரொனுக்கு மேல் இருந்தால் மூக்கு, அதற்கு அடுத்துள்ள பகுதியிலேயே தங்கிவிடும். சளியில் வெளிப்பட்டுவிடும். நீர்த் திவலையின் அளவு 5 முதல் 10 மைக்ரொனாக இருந்தால், நுரையீரலில் சென்று தங்கிவிடும்.

'மன்டோ' பரிசோதனை மூலம் காச நோய் கிருமித் தொற்றைக் கண்டறியலாம். பரிசோதனையில் பொசிட்டிவ் என்று வந்தால் அவர்களுக்குக் காச நோய் உள்ளது என்று அர்த்தம். இவர்களுக்கு, மேலே சொன்ன அறிகுறி இருந்தால், உடனடியாகச் சிகிச்சை எடுக்கவேண்டும்.அறிகுறிகள் ஏதும் இல்லை என்றால், சிகிச்சை தேவை இல்லை. ஏனெனில், சிகிச்சை எடுத்தாலும் மீண்டும் கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்பு அதிகம்.

அப்பா அல்லது அம்மாவுக்குக் காசநோய் இருந்து, 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு பரிசோதனை முடிவு பொசிட்டிவ் என்று வந்தால், அவர்கள் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.




உலகில் கொரோனாத் தொற்றால் காசநோய்க்கான சிகிச்சை வழங்கலில் தடங்கல்கள் ஏற்பட்டன. குழந்தைகளுக்கான தடுப்பூசி வழங்கலிலும் உலகளாவியரீதியில் தடங்கல்கள் ஏற்பட்டன. இவை அனைத்தும் காசநோயினை உலகில் 2035ஆம் ஆண்டளவில் இல்லாது செய்யும் செயற்றிட்டங்களில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இன்று உலகில் 2 பில்லியன் மக்கள் காச நோய்க் கிருமியின் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். ஆண்டுதோறும் 10 மில்லியன் மக்களுக்கு காச நோய் ஏற்படுகின்றது. இதில் ஒரு மில்லியன் சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். எயிட்ஸ் நோயாளிகளில் 8,00,000 பேருக்கு வருடந்தோறும் காச நோய் ஏற்படுகின்றது. இன்று உலகில் ஆண்டுதோறும் 3 மில்லியன் காச நோயாளிகளுக்கு எந்தவித சிகிச்சை வசதிகளும் கிடைப்பதில்லை.

காச நோய்க் கட்டுப்பாடு, சிகிச்சை வழங்கல் தொடர்பாக முன்னுரிமை வழங்குவதற்கு உலக காச நோய்த் தினத்தில் காசநோய்க் கட்டுப்பாட்டுக்கான துரித அணுகுமுறைகளையும், இலகு அணுகுமுறைகளையும் ஏற்படுத்த அறைகூவல் விடவேண்டிய தருணமாகும். மேலும் கொரோனாக் கட்டுப்பாட்டில் அடைந்த வெற்றிகரமான செயற்றிட்டங்களை உலக நாடுகள் காச நோய்க் கட்டுப்பாட்டிற்கும் பிரயோகிக்க வேண்டும். உலகம் கொரோனா உடன் காச நோயினையும் சிந்திக்கவேண்டிய தருணம் இதுவாகும்.

கொரோனாத் தடுப்பில் எவ்வாறு முழு உலகமும் விரைவாகச் செயற்பட்டுத் தடுப்பூசிகளைத் தயாரிப்பதில் வெற்றி பெற்றதோ அவ்வாறே காச நோய்க் கட்டுப்பாட்டிலும் விரைவாகச் செயற்பட முடியும்.

மிகவும் அண்மைய வருடங்களில் காச நோயினை விரைவாகக் குணப்படுத்தக்கூடிய மருந்துகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் காச நோயினை நான்கு மாதங்களில் குணப்படுத்த முடியும். மேலும் காச நோயாளிகளின் உடலில் நோயெதிர்க்கும் திறனை அதிகரிக்கும். மருந்துகளை அளித்துக் காச நோயாளிகளை பத்து தினங்களில் குணப்படுத்தக்கூடிய சாத்தியங்களும் மருத்துவ ஆராய்ச்சியில் கைகூடியுள்ளது.

கொரோனாத் தடுப்பு மருந்துத் தயாரிப்பில் இந்திய அரசு உலகில் முன்னணி வகித்து பாரிய மருத்துவ மனிதநேயப் பணியினைப் புரிகின்றது. இன்று உலகில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பு மருந்தினை வழங்குகின்றது.

பாரத கொரோனாத் தடுப்புமருந்துச் செயற்றிட்டம் வெற்றியடைந்துள்ள நிலையில், பாரத மருத்துவ ஆளணியினரால் காச நோய்க்கான மருந்துகளை நான்கு மாதங்களில் குணப்படுத்துவதற்கும் மேலும் ஒருசில வாரங்களில் குணப்படுத்தக்கூடிய மருந்து வகைகளையும் உருவாக்க முடியும். இதனை காச நோயாளர்களது நலன்கருதி உற்பத்தி செய்து விநியோகிக்க வேண்டும். இதன்மூலம் காச நோயினை எளிதில் குணப்படுத்தக்கூடிய நோயாக மாற்றி, காசநோயின் பாதிப்பினை உலகில் இல்லாது செய்யலாம்.

## தவக்கால சிந்தனை




### வலியவர் ஆயுதம் தாங்கி..!

'வலியவர் ஆயுதம் தாங்கி தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக்கலங்களையும் பறித்துக்கொண்டு கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார்' என்னும் இயேசுவின் எச்சரிக்கை மொழிகளை இன்று சிந்திப்போமா?

நமது ஆன்மீக வாழ்வு என்பது ஒரு போராட்டம் நிறைந்த வாழ்க்கை. அதில் நாம் எந்த நிமிடமும் விழிப்பாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கர்ச்சிக்கும் சிங்கம் போன்ற அலகை நம்மைத் தாக்கி, நமது படைக்கலங்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டு, நம் வாழ்வையும் பங்கிட்டுக்கொள்வான். எனவே, நாம் ஆயதம் தாங்கி நம் வாழ்வைக் காத்துக்கொள்ள வேண்டும். எந்த ஆயுதம் தாங்கி? இறைவார்த்தை ஓர் ஆயுதம். அன்புச் செயல் என்பது இன்னொரு ஆயுதம். செபம் என்பது இன்னொரு ஆயுதம். இந்த ஆன்மீக ஆயுதங்கள் தாங்கி, நம்மைக் காத்துக்கொள்வோமாக.

## நக்கல் நமசிவாயம்

மிச்ச நாளைக்கு பிறகு சொந்தக்கார ஆக்கள் கொஞ்சப்பேர மீட் பண்ணினன் பாருங்கோ... அவங்களுக்கு ரீ வாங்கிக் கொடுத்தன்.. நானும் வசதியா வாழுறன் எண்டத காட்டத்தானே வேணும்...



# எதையும் தாங்கும் புதிய பொருள்



அதிர்வு, தாக்குதல், எடை என்று எதையும் தாங்கும் பொருட்கள் பலவித கருவிகளில் பயன்படுகின்றன. அண்மையில், அமெரிக்காவிலுள்ள ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒரு புதிய பொருளை உருவாக்கியுள்ளனர்.

அது மிக எடை குறைவாக இருந்தாலும், ஒரு வலுவான உலோகத்திற்கு உரிய அளவு தாக்குதலின் அதிர்வை உள்வாங்கும் திறன் கொண்டதாக உள்ளது. ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட இந்த விந்தைப் பொருள் கடினத் தன்மையும், அதேநேரத்தில் நெகிழ்வுத் தன்மையும் கொண்டுள்ளது.

இத்தகைய பொருட்கள் திரவப் படிக எலாஸ்டோமர்கள் (L.C.E.) என்று அழைக்கப்படுகின்றன. எல்.சி.இயின் வலைப்பின்னல்கள் போன்ற அமைப்பை பலவித சோதனைகளுக்கு உட்படுத்தியபோது, அது தன் மீது மோதும் ஆற்றலின் விசையை உள்வாங்கி, மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

அதுமட்டுமல்ல, இந்தப் பொருளை மறுசுழற்சி செய்ய முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பொருளைக் கொண்டு தலைக்கவசம், போர்க்கவசம் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் போன்றவற்றை செய்யலாம் என ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய நாளில்...

- 1837 – கனடாசில் ஆபிரிக்கக் கனடியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1854 – வெனிசுவேலாவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.
- 1882 – காச நோயை உருவாக்கும் நோய்க் கிருமியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக ரொபர்ட் கோக் அறிவித்தார்.
- 1896 – வரலாற்றில் முதன்முதலாக வானொலி சமிக்ஞயை ரஷ்ய அறிவியலாளர் அலெக்சாண்டர் பப்போவ் உருவாக்கினார்.
- 1947 – மவுண்ட்பேட்டன் பிரபு பிரித்தானிய இந்தியாவின் ஆளுநரானார்.
- 1961 – பிரெஞ்சு மொழிக்கான கியுபெக் வாரியம் அமைக்கப்பட்டது.
- 1965 – இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிப் பயன்பாட்டை ஏதுவாக்குவதும் வடக்கு, கிழக்கில் அரச நில பகிர்ந்தளிப்பில் தமிழ் மொழி பேசுவோருக்கே முன்னுரிமை வழங்கவும் டட்லி-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1965 – நாசாவின் ரேஞ்சர் 9 விண்கலம், சந்திரனில் மோதும் முன்னர் சந்திரனின் புகைப்படங்களை வீடுகளிலுள்ள தொலைக் காட்சிகளில் பார்க்கக்கூடிய படங்களாக மாற்றி பூமிக்கு அனுப்பியது.
- 1993 – சூமேக்கர்-லேவி வால்வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டது.

# எரிபொருள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு

இரண்டு அல்லது மூன்று நாட்களில் பெற்றோலுக்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படாது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதிய பெற்றோல் கையிருப்பு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருந்த போதிலும், நேற்று இரவும் சில பகுதிகளில் பெற்றோலுக்கான நீண்ட வரிசைகள் காணப்பட்டன. இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரிடம் வினவிய போது, மேலும் ஒரு மாதத்திற்கு போதுமான அளவு பெற்றோல் கொள்வனவுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய மூன்று கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் இருப்பதாகவும் அதில் இரண்டு கப்பல்களில் இருந்து பெற்றோல் மற்றும் டீசல் இறக்கப்படுகிறது.

மேலும், எதிர்வரும் நாட்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு போதுமான அளவு எரிபொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளன. முன்னைய நாட்களுடன் ஒப்பிடும்போது தற்போது எரிபொருள் நிலையங்களில் காணப்படும் நீண்ட வரிசைகள் குறைந்துள்ளதாக கண்காணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன், நேற்றைய தினம் அதிகமான டீசல்களை விநியோகிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நாட்டில், 8,500 மெட்ரிக்தொன்னுக்கும் அதிகமான எரிபொருட்கள் நாளாந்தம் பயன்படுத்தப்படுவதாக வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.ஆனால், இது போதுமான அளவில் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய கடன் உதவியின் கீழ் எரிபொருளை ஏற்றிய மற்றுமொரு கப்பல் இன்று அல்லது நாளை துறைமுகத்தை வந்தடையவிருக்கின்றது. போதியளவிலான மண்ணெண்ணெயை விநியோகிக்குமாறு தாம் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 23.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 1 3 5388 | 103 5221 |
| கனேடியன் டொலர் | 107 5253 | 117 32 7 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 32 451 | 34 0 86 |
| யூரோ | 2 5 2187 | 206 2352 |
| ஜப்பான் யென் | 1 1616 | 1 2621 |
| சிங்கப்பூர் டொலர் | 1 2 4 18 | 100 3632 |
| ஸ்ரேலிங் பவுன் | 255 1 6 | 27 2 0 |
| சுவிஸ் பிரான்ங் | 183 5312 | 2 6 0247 |
| ஐ.அ.டொலர் | 163 8845 | 173 8872 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 632 64 5 |
| குவைட் | குவைட் தினார் | 812 304 |
| ஓமான் | ஓமான் றியால் | 617 2431 |
| கட்டார் | கட்டார் றியால் | 65 4436 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 63 6416 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 65 2342 |

## "தர்கா நகரின் பொக்கிஷங்கள்" நூல் வெளியீடு



(பீ.எம். முக்தார்)

"தர்கா நகரின் பொக்கிஷங்கள்'' எனும் நூலின் வெளியீட்டு விழா தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

தர்கா நகர் வரலாறு அடங்கிய இந்த நூலை தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் வெளியிட்டுள்ளது. ஊடகவியலாளர் முஹம்மத் இம்தியாஸ் நூலை எழுதியுள்ளார்.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஜோர்தான் நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் ஏ.எல்.எம். லாபிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி மௌலவி எம்.ஆர்.எம் ஸில்மி (நூரி), பேருவளை பிரதேச சபை எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் ஏ.ஆர்.எம் பதியுத்தீன், பிரதேச சபை உறுப்பினர் ஹசீப் மரிக்கார், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. அமைப்பின் முன்னாள் தலைவர் ஹலீம் ஏ.அஸீஸ் சமூக சேவையாளர் எம்.பாஸி ஸுபைர் உட்பட தர்கா நகரைச் சேர்ந்த உலமாக்கள், புத்திஜீவிகள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நூலின் முதல் பிரதியை ஜோர்தான் நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் ஏ.எல்.எம் லாபிர் நஜீப் பின் அமீர் ஆலிம் இடமிருந்து பெற்றுக் கொண்டார்.





அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க பிரதி செயலாளர் விக்டோரியா நுலாண்ட் உள்ளிட்ட மூவரடங்கிய குழு நேற்று முன்தினம் (22) நாட்டை வந்தடைந்தது. அக்குழுவினரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயந்த கொலம்பகே ஆகியோர் வரவேற்றனர்.

# அதியுயர் ஊடக விருதுகள் 2019/2020



ஊடகவியலாளர் யோ.தர்மராஜ் -ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான விருது (2019)



பக்கவடிவமைப்பாளர் திருமதி. எஸ். கலைச்செல்வி - சிறந்த பக்கவடிவமைப்பாளருக்கான சான்றிதழ்



இந்திரஜித் சுபசிங்க - சிறந்த விளையாட்டு ஊடகவியலாளருக்கான விருது



புகைப்பட ஊடகவியலாளர் பிரதீப் தம்பரகே - சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (2019/2020)



ஊடகவியலாளர் ஹர்ஷணி தசநாயக்க - ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான விருது (2020)



ஊடகவியலாளர் சுரேகா சமரசேன-ஆண்டின் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது (2019)



ஊடகவியலாளர் வஜிர லியனகே - சிறந்த விவரணக் கட்டுரையாளருக்கான விருது



புகைப்பட ஊடகவியலாளர் சமன் அபேசிறிவர்தன - சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான சான்றிதழ்







இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகை ஆசிரியர் பேரவை ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த அதியுயர் ஊடக விருதுகள் வழங்கும் வைபவம் (2019/2020) நேற்று முன்தினம் (22) கொழும்பு, ஹில்ட்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் எமது பத்திரிகை நிறுவனத்தின் ஊடகவியலாளர்களும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.






நாட்டுக்கோட்டை நகரத்தார் கம்பளை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா நேற்று நடைபெற்றது. இதில் பக்த அடியார்கள் கலந்துகொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். **(கம்பளை நிருபர்)**

# நுவரெலியாவில் உற்பத்திசெய்யும் மரக்கறிகளை கொள்வனவுசெய்ய வியாபாரிகள் வருவதில்லை

## பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் பாதிப்பு



(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் மரக்கறிகளை விற்பனை செய்துகொள்ள முடியாமல் விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் வியாபாரி ஒருவர் நாளொன்றுக்கு 3,000 கிலோ முதல் 5,000 கிலோ மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு விற்பனை செய்துவந்த நிலையில், இன்று 200 கிலோ மரக்கறிகளை கூட விற்பனைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் டீசல் தட்டுப்பாட்டால் வெளி மாவட்டத்திலுள்ள வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவுசெய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருவதில்லை. இதனால் மரக்கறி விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை, மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை விற்பனைசெய்ய முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர்.

அத்தோடு மரக்கறித் தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இது இவ்வாறிருக்க, தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்து பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் இரசாயன உரம், கிருமிநாசினி இறக்குமதிக்கு தடை செய்யப்பட்டதால் மரக்கறி உற்பத்தியில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாகவும் மரக்கறி உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்பொழுது சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகவும் உற்பத்தியாளர்களும் மரக்கறி வர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் பல இடங்களிலும் உள்ள உணவகங்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் உணவு மற்றும் தேநீர் வழங்க முடியாமல் அவை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு ஹோட்டல்காரர்கள் வருவதில்லை. மரக்கறி உற்பத்தி செலவு தற்பொழுது அதிகரித்துள்ளது. அதற்கேற்ப மரக்கறியை நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் மரக்கறி உற்பத்தியாளர்கள் நஷ்டமடைகின்றனர். தங்களது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கும் சிரமப்படுகின்றனர் என்றார்.

# டீசலுக்காக காத்திருக்கும் தனியார் பஸ் சாரதிகள்

## மக்களும் பெரும் அவதி



*(மனுர சுதத் செல்லஹேவா)*

நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக அதிகமான தனியார் பஸ்கள் இயங்காது டீசலுக்காக காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பஸ் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஹட்டன் பிரதேசத்தில் தொடரும் டீசல் தட்டுப்பாடு காரணமாக அப்பகுதியில் அதிகளவான தனியார் பஸ்கள் இயங்காததால் பஸ் உரிமையாளர்கள் உட்பட சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், அப்பகுதியில் டீசல் தட்டுப்பாடு நிலவுவதால் பஸ்களை இயக்குவதை நிறுத்திவிட்டு, டீசலுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகளினால் பஸ்ஸில் பணிபுரியும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட தொழிலுக்காக செல்லும் பணியாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட பஸ்களே சேவையில் ஈடுபடுவதால் குறித்த நேரத்துக்கு செல்ல முடியாமலும் பஸ்ஸினுள் கடும் நெரிசலில் முண்டியடித்துக்கொண்டு செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் சிலர் மயக்கமுற்றும் விழுகின்ற அதேவேளை, குறித்த நேரத்துக்கு பணியிடத்துக்கு செல்லமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

மேலும், பாடசாலைக்கும் நேரத்துக்கு செல்ல முடியாத நிலையும் காணப்படுவதாக மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் ஹட்டன் - கண்டி, ஹட்டன் - கொழும்பு போன்ற தொலைதூர சேவைகள் மட்டுமன்றி சில குறுகியதூர தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# முறையற்ற பொருளாதாரக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளது

## மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஸ்ரீதரன்

இன்றைய முறையற்ற அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை மற்றும் நிர்வாக செயற்பாடு காரணமாக எமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாகவும் எனவே, அரசுக்கெதிராக தலவாக்கலையில் ஏப்ரல் 03ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் பேரணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொகவந்தலாவை பிரதேச தோட்டக் கமிட்டி தலைவர்களுக்கான கூட்டம் நேற்று முன்தினம்(22) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்கப்படுவதாக கூறப்பட்டபோதிலும் தற்போது அந்த நிவாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ள அதேவேளை, மலையகத்தில் போலியான அபிவிருத்தியே இடம்பெறுகின்றது எனவும் தெரிவித்தார்.

இன்றைய முறையற்ற அரசாங்கத்துக்கு எதிராக நாட்டுமக்கள் அணிதிரண்டு போராடி வருகின்றனர். அந்தவகையில் எதிர்வரும் ஏப்ரல் 03ஆம் திகதி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் தலவாக்கலையில் மாபெரும் மக்கள் பேரணி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். இந்தப் பேரணி மூலமாக



அரசாங்கத்துக்கு எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். நாட்டின் பொருளாதார சீரற்ற நிலைமை காரணமாக பெருந்தோட்ட மக்கள் ஏனைய மக்களை விட பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். தற்போதைய எரிபொருட்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் என்றுமில்லாதளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நாட்டுமக்கள் தினமும் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், எத்தகைய வருமானமுமின்றி வாழ்கின்ற பெருந்தோட்டத் தொழிலை மாத்திரம் நம்பியுள்ள தோட்டத் தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறைந்த வருமானத்தைக்கொண்டு தற்போதைய வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாது தத்தளிக்கின்றனர் - என்றார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பசறை கொமர்ஷல் வங்கிக் கிளையினூடாக முன்னெடுக்கப்படும் சி.எஸ்.ஆர். (corporate social responsibility) கூட்டு சமூக பொறுப்பு செயற்றிட்டத்தினூடாக பாடசாலைகளுக்குத் தேவையான மின்னியல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் ரமேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கொமர்ஷல் வங்கி பிராந்திய முகாமையாளர் சமிந்த கலுகமகே, பசறை வங்கிக் கிளை முகாமையாளர் விசித்ர விஜயசூரிய ஆகியோர் கலந்துகொண்டு நகல்பிரதி இயந்திரம் மற்றும் கணினி உபகரணங்களை அன்பளிப்பு செய்தனர்.

**(நடராஜா மலர்வேந்தன்)**



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் மாத்தளை மாவட்ட அந்நூர் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி பாத்திமா ஹுஹாரா(171) புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் வரக்காமுறையை சேர்ந்த சீனிமுஹம்மட் - பாத்திமா சிபானா தம்பதிகளின் புதல்வியாவார்.

**(மாத்தளை நிருபர்)**



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த அந்நூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றிய முஹம்மட் ரபீக் பாத்திமா(156) புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் வரக்காமுறையை சேர்ந்த ஏ.ஜே.எம்.ரபீக் - எம்.எச்.எஸ்.ஹகீமா தம்பதிகளின் புதல்வியாவார். **(மாத்தளை நிருபர்)**




சப்ரகமுவ மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் மூலம் 110 இலட்சம் ரூபா செலவில் கேகாலை யோதகம மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதி நேற்றுமுன்தினம் (21) திறந்துவைக்கப்பட்டது. இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். **(இரத்தினபுரி நிருபர்)**

# மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்க கூட்டத்துக்கு அழைப்பு

**(கண்டி நிருபர்)**

மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மடவளை மதீனா தேசிய பாடசாலையின் ஆண்கள் பிரிவு மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவுள்ளது. எனவே, மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களும் மடவளையைச் சேர்ந்த அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சகலரையும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி சங்கம் மடவளை பிரதேசத்தில் பல்வேறு சமூகப் பணிகளையும் குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கு பல்வேறு நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





உக்குவளை சூரீவெல ஹமீதியா தேசிய பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு அதிபர் அஸ்லம் தலைமையில் நடைபெற்றதையும் மாணவத் தலைவர்களுக்கு ஆசிரியர்களால் சின்னம் அணிவிக்கப் படுவதையும் படங்களில் காணலாம்.

**(உக்குவளை நிருபர்)**

# தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் புதிய தலைவர் தெரிவு

**(தலவாக்கலை நிருபர்)**



தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் புதிய தலைவரை தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்று (23) நடைபெற்றது. இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் சந்தன பிரதீப் குணதிலக்க தெரிவாகியுள்ளார்.

தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் புதிய தலைவர் ஒருவரை தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. சபைக்கு 11 உறுப்பினர்கள் சமுகமளித்திருந்த நிலையில், தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பிரசன்ன குமாரவினால் நகர சபையின் புதிய தலைவராக சந்தன பிரதீப் குணதிலக்கவின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனை நகர சபையின் தற்காலிகத் தலைவர் லெட்சுமன் பாரதிதாசனால் வழிமொழியப்பட்டது.

இதனையடுத்து வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்படாத நிலையில் தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் புதிய தலைவராக சந்தன பிரதீப் குணதிலக்க தெரிவுசெய்யப்பட்டதாக மத்திய மாகாண நிர்வாக அதிகாரி மேனக ஹேரத் சபையில் தெரிவித்தார்.

தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் தலைவராக செயற்பட்ட அசோக சேபால அப்பதவியிலிருந்து இடைநிறுத்தப்படுவதாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகேவினால் அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, தலவாக்கலை - லிந்துலை நகர சபையில் உபதலைவராக பதவி வகித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் லெட்சுமன் பாரதிதாஸன் தற்காலிக தலைவராக தமது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். அதனை தொடர்ந்து தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மத்திய மாகாண பணிப்பாளர் சாந்த விமல் அபேவிக்ரம மற்றும் அவரது குழுவினர் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவை கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (22) சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுசின்தன திசாநாயக்க, மாத்தளை மாவட்ட உதவிப் பணிப்பாளர் திலக் தர்மகீர்த்தி, நுவரெலியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுமித் கொட்டின்கடுவ ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (கண்டி நிருபர்)





புங்குடுதீவு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய சூழலில் சூழகம் அமைப்பினரின் ஏற்பாட்டில் பயன்தரு மரக்கன்றுகள் நடும் நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, பேராசிரியர் மா.இளம்பிறை, சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டு நாட்டி வைத்தனர்.

**(சாவகச்சேரி நிருபர்)**

## தனுஷ்கோடியைச் சென்றடைந்த மன்னார் எமில்நகரைச் சேர்ந்த...

# இளம் குடும்பமொன்றின் உறவினர்களின் வீடுகளுக்கு கடற்படையினர் சிவில் உடையில் சென்று அச்சுறுத்தல்

வீடியோவைக் காண...

**(மன்னார் நகர் நிருபர்)**



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக மன்னாரிலிருந்து நேற்று முன்தினம் (22) அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்த மன்னாரைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களில் மன்னார் எமில்நகர் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பம் ஒன்றின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளுக்கு கடற்படையினர் சிவில் உடையில் சென்று அச்சுறுத்தல் விடுத்திருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் எமில்நகர் மற்றும் சிலாபத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் கடந்த திங்கட்கிழமை இரவு தலைமன்னாரிலிருந்து தமிழகம் நோக்கி பயணித்துள்ளனர்.

இந்நபர்களை படகோட்டி கடலில் உள்ள தீடை பகுதியில் இறக்கிவிட்டுச் சென்ற நிலையில், தனுஷ்கோடியை அடுத்துள்ள 4ஆவது மணல் திட்டுப் பகுதியில் குறித்த 6 பேரும் நின்றுள்ளனர்.

தகவலறிந்து இலங்கை தமிழர்களை அழைத்து வர மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான கப்பல் விரைந்து சென்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை அவர்களை மீட்டனர்.

இந்நிலையில் மன்னார் எமில்நகர் பகுதியில் இருந்து இந்தியா சென்ற இளம் குடும்பம் ஒன்றின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கு சிவில் உடையில் சென்ற கடற்படையினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

மேலும் குறித்த இளம் குடும்பத்தினரின் பெற்றோர்களை கைதுசெய்ய முற்பட்டுள்ளதாகவும் இந்தியாவைச் சென்றடைந்த மேரி கிளாரி என்ற பெண்ணின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் தொடர்ந்து விசாரணை என்ற போர்வையில் சிவில் உடையில் பலர் வீட்டுக்கு வருவதாகவும் உரிய சீருடை, அடையாள அட்டைகளின்றி அச்சுறுத்தும் விதமாகவும் கொலை, கடத்தல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள்போல் தங்களை அச்சுறுத்தும் விதமாகவும் விசாரணைகள் மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த அச்சுறுத்தல்கள் மற்றும் விசாரணைகள் தொடரும் பட்சத்தில் தாங்கள் பொலிஸ்நிலையம் அல்லது மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சமடையவேண்டியசூழ்நிலை ஏற்படும் என பாதிக்கப்பட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

## இரண்டு மாதங்களில் யாழ். மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையால் 78 வழக்குகள் தாக்கல்!

**(யாழ். நிருபர்)**

யாழ். மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கைகளின் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமை வரைக்கும் 78 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் (22) அனுப்பிவைத்த ஊடக அறிவித்தலிலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிவிப்பில்,

நிபந்தனை அடிப்படையில் பால்மா பொருட்கள் விற்பனை செய்தல், விற்பனை செய்ய மறுத்தல், விலையினை மாற்றி விற்பனை செய்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலையினை வெளிக்காட்டாமை மற்றும் பொதி செய்யப்பட்ட பொருட்களின் மீது முறையான தரவுகள் வெளிக்காட்டாமை தொடர்பாகவே வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை தொடர்ச்சியாக பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வினை நடத்தி வருகின்றது என்பதோடு இறுதியாக பாவனையாளர் தினத்தன்றும் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றினை நடத்தி பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

மேலும், அன்றையதினம் திரவ பெற்றோலியவாயு களஞ்சியசாலையில் இருப்பிலிருந்த வாயு கொள்கலன்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பாவனையாளர் அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை பொதுமக்களிற்கு இயன்றளவு சேவையை வழங்க காத்திருப்பதோடு பொதுமக்களிடமிருந்து பெறுமதியான முறைப்பாடுகளை எதிர்பார்க்கின்றது.

பொதுமக்கள் துரித சேவை - 1977, யாழ். நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை - 0212229001 தொலைபேசி அழைப்பினூடாக எந்நேரமும் முறைப்பாட்டினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரபுரிமைச் சின்னங்களை ஆவணப்படுத்தும் கண்காட்சி யாழ். கோட்டையில் ஆரம்பம்



**(யாழ். நிருபர்)**

தொல்லியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் ஏற்பாட்டில் மரபுரிமைச் சின்னங்களை காட்சிப்படுத்தி ஆவணப்படுத்தும் கண்காட்சி யாழ்ப்பாண கோட்டையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சியை இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நெதர்லாந்தின் தூதுவர் தஞ்சா கோங்கிரிஜ்ப் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், ஓய்வுபெற்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

## இந்திய துணைத் தூதுவர் - யாழ். மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

**(யாழ். நிருபர்)**



யாழ்ப்பாண மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் இந்திய துணைத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணம் தீவகப் பகுதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் வருகை கடந்த திங்கட்கிழமை மற்றும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துமாறு கோரி யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தலைமையிலான மீனவ சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவராலயத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலின்போது ஏற்கனவே யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் காரணமாக இலங்கை எல்லைக்குள் அத்துமீறிய இந்திய இழுவைமடி படகுகளின் வருகை கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய தீவு பகுதிகளில் இந்தியப் படகுகள் இலங்கை எல்லைக்குள் வருவதாகவும் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கழிவுநீர் சுத்திகரிப்பு சுகாதாரத் திட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல்



**(யாழ். நிருபர்)**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு சுகாதாரத் திட்ட விழிப்புணர்வு கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனின் தலைமையில் கடந்த திங்கட்கிழமை (21) பி.ப 2.30 மணியளவில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கழிவுநீர் சுத்திகரிப்பு சுகாதாரத் திட்டம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய சுகாதார பாரிய திட்டம் என்னும் நூல் வெளியிடப்பட்டதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்திட்டத்தினை 2020 – 2030இற்குள் எவ்வாறு மேற்கொள்வது, அதன் குறிக்கோள்களை அடைவதற்கான சாத்தியப்பாடுகள், எவ்விடங்களில் மேற்கொள்வது, கழிவுநீர் சுத்திகரிப்பை சரியாக மேற்கொள்ளாமையால் ஏற்படுகின்ற பாதிப்புகள், அதற்கான தீர்வுகள், நிதித் தேவைகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் , தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் ஏ.எம்.ஏ.ரபீக், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உதவி பொது முகாமையாளர் ஈ.ஈ.யேசுதாசன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பொறியியலாளர்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், நகரசபை தவிசாளர்கள் உள்ளிட்ட துறைசார் பங்குதாரர்களும் கலந்துகொண்டனர்.

## காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி போராடிய தவிசாளர் உள்ளிட்டோர் விசாரணைக்கு அழைப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து வைத்த நிலையில், அங்கு காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்களுடன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செல்வரட்ணம் மயூரன் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் இன்று வியாழக்கிழமை (24ஆம் திகதி) காலை 9 மணிக்கு நுணாவிலில் உள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைகளுக்காக சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ். விஜயத்தின்போது காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மட்டுவில் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

அவ்வாறாக வருகைதந்த தாய்மாரை பொலிஸாரும் இராணுவத்தினரும் கடுமையாக தாக்குவதை அறிந்து அப் பகுதிக்குச் சென்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் உள்ளிட்டவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினருடன் இணைந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிக்கோரியும் தாய்மார் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் பொருளாதார மத்திய நிலைய வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் அங்கு பதாகைகள் எரிக்கப்பட்ட விடயம் தொடர்பில் பொலிஸாரால் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் உள்ளிட்டவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை

**(யாழ். நிருபர்)**

ஈழத்து சித்தர் சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை நாளை 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சிவயோக சுவாமிகளின் மகா சமாதி தினத்தன்று இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் முதல்வரும், அமெரிக்காவின் ஹாவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்தவருமான ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் “யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும், சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்” என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார்.

# மன்னாரில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் மாணவர்கள் - அரச உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



**(மன்னார் நகர் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வும் மன்னார் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சிரேஷ்ட இணைப்பு அதிகாரி பாக்கியராஜா பிரதீபன், மன்னார் மாவட்ட திட்டப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் உட்பட பிரதேச செயலாளர்கள், உதவி செயலாளர்கள், உதவி திட்டப் பணிப்பாளர்கள், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் 8 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் ஒரு மாணவனுக்கு 50 ஆயிரம் ரூபா மற்றும் 20 ஆயிரம் ரூபாவும் ஏனைய மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா காசோலை மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை அரசாங்க அதிபர் வழங்கி கௌரவித்தார்.

அத்துடன், 2021ஆம் ஆண்டு இலங்கையில் முதல் 10 சிறந்த மாவட்டங்கள் என இலங்கை சமூக பாதுகாப்புச் சபை தரப்படுத்தல் பட்டியலில் மன்னார் மாவட்டம் உள்வாங்கப்பட்டமையும் இதில் குறிப்பாக நானாட்டான் பிரதேச செயலகம் தேசிய விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும், முசலி பிரதேசம் 100 வீத அடைவு மட்டத்தை பூர்த்திசெய்துள்ளமையும் பாராட்டி அரச அதிபரினால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும் அரச ஓய்வூதியத் திட்டத்தின் ஊடாக சிறப்பாக பணியாற்றிய பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், உதவி திட்டப் பணிப்பாளர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தை அம்பாறைக்கு இடமாற்றுவதற்கு மீண்டும் முஸ்தீபு

## தீர்வைப் பெற்றுத்தருமாறு இளைஞர்கள் கோரிக்கை



(மாளிகைக்காடு, அம்பாறை நிருபர்கள்)

இளைஞர் அபிவிருத்தி பணிகளில் இன மற்றும் பிரதேசவாதங்கள் எதுவுமின்றி நேர்மையான முறையில் தேசிய நலன்களைக் கவனத்திற் கொண்டு செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம் சாய்ந்தமருதிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அதனை அம்பாறை நகரத்திற்கு கொண்டுசெல்ல வேண்டி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அதனைத் தடுத்து நிறுத்தி அவ்விடத்திலேயே தொடர்ந்தும் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இவ்விடயத்தில் அம்பாறை மாவட்ட அரசியல்வாதிகள் அடங்களாக கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்து முன்னோடி இளைஞர் தலைவர்கள் ஊடக சந்திப்பொன்றை நடத்தினர்.

இளைஞர் நாடாளுமன்ற கப்பல் துறைமுகங்கள் பிரதியமைச்சர் எஸ்.எம்.நிஹான், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட பிரதிநிதி சிப்னால் அஷீஸ், இளைஞர் கழகங்களின் சம்மேளன அம்பாறை கிளையின் பிரதித்தலைவர் எம்.எம்.ருக்ஸான், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ மாவட்ட கிளையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹிஸாம் ஏ பாவா, சாய்ந்தமருது இளைஞர் கழக சம்மேளன தலைவர் எம்.சிப்னாஸ், கிழக்கின் கேடயம் அமைப்பின் பிரதிநிதி இஸட். சக்கி ஆகியோர் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (22) இரவு சாய்ந்தமருது சீ பிரிஸ் இல் நடைபெற்றது. இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் எவ்வித தடைகளுமின்றி முறையாக இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் வகையில் சிலர் ஈடுபட்டு வருவதையிட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். ஓரிரு உத்தியோகத்தர்களின் சுயநல தேவைகளுக்காக இளைஞர்களின் அபிலாஷைகளை விட்டுக்கொடுக்க முடியாது.

போக்குவரத்தை காரணம் காட்டி இப்போது இருக்கும் காரியாலயம் பிரதான வீதியிலிருந்து தூரம் கூடுதலாக இருப்பதாக கூறும் அவர்கள், இதனை இப்போது மாற்ற எடுக்கும் இடம் பிரதான வீதியிலிருந்து இப்போது இருக்கும் காரியாலயத்தின் தூரத்தை விட மிக அதிக தூரமாக அமைந்துள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஓரிரு சுயநல சிந்தனைக்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தமிழ் பேசும் இளைஞர்கள் பயன்பெறும் குறித்த அலுவலகம் ஏன் மாற்றப்பட வேண்டும்? நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுணர்வு பற்றியும் இளைஞர்களின் அபிவிருத்தி பற்றியும் மக்களும் அரசாங்கமும் கருத்து கூறிவரும் இச்சூழ்நிலையில் அதனைச் சிதைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே சாய்ந்தமருதில் இயங்கிவரும் கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அதே இடத்தில் மேற்கொள்ளும் வகையில் அதற்கான உத்தரவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் ஜனாதிபதி, பிரதமர், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தவிசாளர் ஆகியோருக்கு ஏற்கனவே எழுத்து மூல மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் அவர்கள் தலையிட்டு இவ்அநீதிக்கு எதிராக நீதியை பெற்றுத்தரவேண்டும் என்றனர்.

# நாவற்கேணி வாள்வெட்டு சம்பவத்தின் சந்தேக நபர்கள் இருவர் கைது - வாள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமை பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்கேணி சந்தியில் இரு குழுக்களுக்கிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் தலைமறைவாகியிருந்த இருவரை நேற்று முன்தினம் (22) கைது செய்ததையடுத்து இதுவரை 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 2 கத்தி, ஒரு வாள் மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், இருவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் இருவர் நேற்று முன்தினம் (22) பொலிஸ் நிலையத்தில் வாளுடன் சரணடைந்ததையடுத்து இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக அனீஸ் பதவி உயர்வு




(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றும் எச்.பீ.அனீஸ் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அட்டாளைச்சேனையை சேர்ந்த இவர் லகுகல, அம்பாறை, பொத்துவில் போன்ற பிரதேச செயலகங்களில் கடமையாற்றியதுடன், இவர் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் நேர்மையான ஓர் அதிகாரியாவார்.

சிறந்த ஆளுமை கொண்ட இவர், அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவர் என்பதோடு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கணக்கீடு துறையில் விசேட பட்டம் பெற்றதோடு, முதுநிலை பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



***சண்டக்காலத்திலதான் நம்மட சனங்கள் கடலால தப்பி இந்தியாவில சரண் அடைந்த வரலாறு ..! ஆனா இப்ப கோட்டா அரசின் கொடுமையால பஞ்சம், பசி, தாங்கமுடியாமல் மறுபடியும் தலைமன்னார் கடலால இந்தியாவுக்கு தப்பி செல்லும் நிலைய பார்த்தால் இந்த பஞ்சமா பாதகம் புடிச்ச அண்ணன், தம்பி, நாசமறுவானுகள் ஆட்சில இருக்கும்வரை நாடும் இருட்டுத்தான்.. நமக்கும் இருட்டுத்தான்.. இந்த சனியனுகள் தொலையும் மட்டும் நமக்கு நிம்மதியே இல்ல..!***

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



(மட்டக்களப்பு நிருபர்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மட்.பட்.குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயத்தில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 7 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாக வித்தியாலய அதிபர் திருமதி.வி.புஸ்பராஜா தெரிவித்தார்.

அந்த வகையில் பு.நிலாஜெனன் 168 புள்ளிகள், பி.பிரணாதித் 163 புள்ளிகள், ரா.கிரோஹித் 157 புள்ளிகள், சி.தக்சாயன் 156 புள்ளிகள், சு.அம்சகி 153 புள்ளிகள், கா.அலேஸ்ருதி 151 புள்ளிகள், பா.அக்ஷாசனா 151 புள்ளிகளையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்நிலையில் பாடசாலை அதிபர் திருமதி.வி.புஸ்பராஜா மற்றும் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான மா.ரவீந்திரன் மற்றும் திருமதி ஜெ.ராஜீ ஆகியோருக்கு அப்பகுதி கல்விச் சமூகம் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.

(கந்தளாய் நிருபர்)



கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/கந். அல்தாரீக் கனிஷ்ட வித்தியாலயத்தில் அண்மையில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று மாணவிகள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமையை ஏற்படுத்தியுள்ளதாக அப்பாடசாலையின் முதல்வர் ஏ.ஆர்.ஏ.ஜவாஹிர் தெரிவித்தார்.

இதன்படி எப்.ரசீமா பானு (157), ஆர்.பாத்திமா அனுத் (154), எஸ்.பாத்திமா சஹீஹா (153) புள்ளிகளாகும்.

சித்தியடைந்த மாணவிகளுடன் பாடசாலையின் அதிபர் ஏ.ஆர்.ஏ.ஜவாஹிர், எம்.சி.ஏ. மனாப், ஆர்.நிபான் ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(பெரியநீலாவணை நிருபர்)



புலமைப்பரிசில் பரீட்சையில் கல்முனை கல்வி வலய முஸ்லிம் கோட்ட பாடசாலைகளுக்குள் மருதமுனை அல்-மதீனா வித்தியாலய மாணவி ஜாபிர் ஜின்னா சுமையா 178 புள்ளிகளைப் பெற்று முஸ்லிம் கோட்ட மட்டத்தில் முதல்நிலை மாணவியாக சாதனை படைத்துள்ளார். இவருக்கு பாடசாலை சமூகம் தமது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.

இவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சி ஜாபிர் ஜின்னா, ஆசிரியை ஏ.எஸ். பஸ்மின் ஆகியோரது புதல்வியாவார். இப்பாடசாலையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் உயர்ந்த புள்ளிகளை பெற்று 12 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலையின் அதிபர் ஏ. குனுக்கத்துல்லா, பிரதி அதிபர் என்.எம். முஹம்மட் முபீன், உட்பட மாணவர்களுக்கு தரம் ஒன்றிலிருந்து கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் நன்றியை தெரிவித்துள்ளனர்.



(கல்லடி நிருபர்)

அண்மையில் வெளியான தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெரியகல்லாறு மெதடிஸ்தமிஷன் பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவன் ச.மிதுர்ஷயன் 181 புள்ளிகளைப் பெற்று பட்டிருப்புக் கல்வி வலய மட்டத்தில் 3 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளார். அத்தோடு இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய கே.சிம்ரோன் (150), ஜெ.பதுஷிகன் (151), ப.ஹபிஷ்ணன் (154), ப.கதுமிதன் (161), சு.அபிலாஷ் (161), சு.அனோஸ்ரிக்கா (166), கு.புருவிகா (151), தி.லிசானி (161), இ.கிருஸ்ணயா (157), ச.விதுஷிகா (161), சி.வர்ஷிதா (162), சு.டினுஸ்ரி (161), தி.ஜினுக்ஷி (147) ஆகியோரும் சித்திபெற்றுள்ளனர்.

# மட்டக்களப்பில் தமிழ் - முஸ்லிம் உறவினை சீர்குலைக்கும் செயற்பாடுகள் முன்னெடுப்பு

## மட்டு. மாநகர மேயர் தெரிவிப்பு

(கல்லடி நிருபர்)



மட்டக்களப்பில் முன்னேற்றமடைந்துவரும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவினைச் சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை காத்தான்குடி நகரசபைத் தவிசாளர் முன்னெடுத்து வருவதாக மட்டக்களப்பு மாநகரசபை மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபையில் நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் காத்தான்குடி நகரசபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஒரு முறை அப்பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்தோம். இதன்போது அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றன. இந்நிலையில் நாங்கள் அப்பகுதிக்குச் சென்று மக்களுக்கு அறிவூட்டல்களை வழங்கியிருந்தோம்.

இது தொடர்பில் காத்தான்குடி நகரசபைத் தவிசாளருக்கும் கடிதமொன்றினை அனுப்பியிருந்தோம். சட்டத்திட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகள் என அதில் நாங்கள் தெரிவித்திருந்தோம். ஆனால் அதற்கு எந்தவிதமான பதில்களும் வழங்கப்படவில்லை. அவர் தனது செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் உரிய அமைச்சுகளுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.

2017ஆம் ஆண்டின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகரசபையின் எல்லை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாநகர சபையின் எல்லைகளை நினைத்தவாறு மாற்ற முடியாது. இருந்தபோதிலும் பிழையான தகவல்களை வைத்துக் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை காத்தான்குடி நகரசபைத் தவிசாளர் முன்னெடுப்பது என்பது ஒரு இனமுறுகலை ஏற்படுத்துவதற்கான அடித்தளமாகவே நான் கருதுகின்றேன்.

தற்போதைய காலத்தில் இரு இனங்களும் ஒன்றாக இணைந்து எமது உரிமைகளை, தேவைகளை பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான இனமுரண்பாடுகளை ஏற்படுத்தி மீண்டும் பிரிவினையை உண்டு பண்ண முயற்சிப்பதாக எண்ணத் தோன்றுகிறது.

நேற்றும் பள்ளிவாசல்கள் ஊடாக காத்தான்குடி நகரசபையில் வரிகளைச் செலுத்துமாறு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். உடனடியாக அப்பகுதிக்குச் சென்று வரிகளை அறவீடு செய்யவும், பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும் பணித்துள்ளேன்.

இந்த அறிவுறுத்தல்களை வழங்கிய பள்ளிவாயல்களுக்கு குறித்த அறிவித்தல் தொடர்பில் விளக்கம் கேட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு மேலாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த காலப்பகுதியில் மட்டக்களப்பு மாநகரசபை உத்தியோகத்தர்களை வரி அறவீடு செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துமாறும் பணிக்கின்றேன். ஆணையாளர் மிக விரைவாக அதனைச் செய்வார் என நம்புகின்றேன் என்றார்.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு சமூக பாதுகாப்பு சபையின் தேசிய விருது





(கிண்ணியா நிருபர்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தில் அதிகமான பயனாளிகளை இணைத்து தேசிய விருது பெற்றுக்கொண்ட தம்பலகாமம் பிரதேச செயலகத்தை பாராட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

2021ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இணைத்துக்கொள்ளப்பட்ட பயனாளிகள் எண்ணிக்கை ஒப்பிட்டு நோக்குகின்ற அடிப்படையில் தம்பலகாமம் பிரதேச செயலகம் 1019 பயனாளிகளை ஓய்வூதியத் திட்டத்திற்கு இணைப்பு செய்துள்ளது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தேசிய விருதுக்கு வரலாற்றில் முதல் தடவையாக திருகோணமலை மாவட்டத்தில் பிரதேச செயலகம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாக பதிவாகியுள்ளது. அதன் அடிப்படையில் பிரதேச செயலகம் தேசிய விருது பெறுவதற்கு வழிகாட்டல்களை வழங்கிய தம்பலகாமம் பிரதேச செயலாளர் சிறீபதி ஜெயகௌரி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜினால் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் எட்டு வெளிக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் இணைப்பு செயற்பாட்டை சிறப்பாக மேற்கொண்டதுடன், எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் கொழும்பில் அவ்உத்தியோகத்தர்களுக்கும் தேசிய விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வித ஓய்வூதியமும் கிடைக்கப்பெறாத பிரஜைகளுக்கு இவ் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ள முடியும். தங்களுடைய பிரதேச செயலகம் அல்லது தங்களுடைய கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது மாவட்ட செயலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு சபையின் அலுவலகம் மூலமாக இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்நிகழ்வில் மாவட்ட சமூக பாதுகாப்பு சபையின் இணைப்பு அதிகாரி பி.சஜீக்கா உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# வாகரையில் உலக நீர் தினத்தையொட்டி 6 கோடி ரூபா நிதியில் குளங்கள் புனரமைப்பு திட்டம் ஆரம்பித்துவைப்பு





(மட்டக்களப்பு, மண்முனை நிருபர்கள்)

உலக நீர் தினத்தையொட்டி மட்டக்களப்பு வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படும் நிகழ்வு வாகரை பாவக்கொடிச்சேனையில் நேற்று முன்தினம் (22) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"எங்களது செயற்பாடு எங்களது எதிர்காலம் - பெண்களையும் விவசாயிகளையும் வலுப்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயல்திட்டத்தில் வாகரைப் பிரதேசத்திலுள்ள திக்கனைக்குளம், மாணிக்கம் குளம், பனிச்சங்கேணிக் குளம் ஆகிய மூன்று குளங்கள் சுமார் 6 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

பெண்கள், குழந்தைகள் உட்பட 1.772 வறுமைக்குட்பட்ட குடும்பங்களை இலக்காகக் கொண்டு அவர்களது மேம்பட்ட வாழ்க்கையை உறுதி செய்வதும் 1000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதும் இதன் பிரதான நோக்கங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் நைனா லர்ரீயா (NINA LARREA), அதன் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிங்கம் மயூரன், கொகாகோலா பவுண்டேஷன் அமைப்பின் இலங்கை மாலைதீவு பிராந்திய இணைப்பாளர் லக்ஷான் மதுரசிங்ஹ, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரன், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கமத்தொழில் சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரகாந்தன் சார்பில் ரீ.எம்.வீ.பி. கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன், பிரதேச செயலக அதிகாரிகள், படையினர், பொலிஸார், இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் அலுவலர்கள் உட்பட பிரதேச பொது மக்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் நைனா லர்ரீயா கொவிட் தொற்றுநோய் மக்களின் பொருளாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மட்டுமல்ல, ஒட்டுமொத்த இயல்பு வாழ்க்கையையும் புரட்டிப்போட்டுள்ளது.

இப்போது இறுதியாக அந்தப் பாதிப்புகளிலிருந்து வெளியேறி வருகிறோம். ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக, மீண்டும் பல உயிர்களை பாதிக்கும் மற்றொரு பொருளாதார நெருக்கடியை நாம் இப்போது சந்திக்க வேண்டியுள்ளது. வறுமையும் பசி பட்டினியும் நமக்கு வெகு தூரத்தில் இல்லை. அதிலிருந்தும் நாம் மீள வேண்டும்.

குறிப்பாக கிராமப்புற பெண்களின் சமூக மற்றும் பொருளாதார சக்தியை வலுப்படுத்துவதன் மூலமே இந்தச் சாதனையை அடைந்துகொள்ள முடியும். அதனால்தான் எங்கள் வளர்ச்சித் திட்டத்தில் பெண்களை மையமாக வைத்துள்ளோம்.

பெண்களுக்கு அதிகாரம் அளித்து பெண்களில் முதலீடு செய்வதன் மூலம் உற்பத்தித்திறன், உணவுப் பாதுகாப்பு மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உருவாக்க முடியும்.

பெண்களுக்கு நிலம், கல்வி, பயிற்சி, நிதி சேவைகள் மற்றும் பலம் கிடைக்கும்போது பொருளாதார ரீதியில் முழு சமூகமும் பயனடைகிறது. எங்கள் அனுபவத்தில் நிலையான விவசாயமே மிகவும் பயனுள்ள வழி என்பது தெளிவாகிறது.

கிராமப்புறங்களின் மறுமலர்ச்சிக்கு ஆதரவளித்து கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நாம் கூட்டுறவுத்துறையின் அனுசரணையையும் பெற்று வருகின்றோம்." என்றார்.

## விசேட தேவையுடைய மாணவர்களின் ஆசிரியர்களுக்காக மட்டக்களப்பில் இடம்பெற்ற கலைக்கூறு பயிற்சிசெயலமர்வு!



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சாரணர் பயிற்சியினை ஆரம்பிக்கும் முகமாக விசேட தேவையுடைய கல்வி அலகுகளில், நிறுவனங்களில் மாணவர்களை வழிப்படுத்தும், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான கலைக்கூறு 1 பயிற்சி நெறியானது, இரண்டு நாட்களை கொண்ட செயலமர்வாக மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் சமூக சேவைகள் அபிவிருத்தி கிளையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தினர் இணைந்து நடத்திய குறித்த இரண்டு நாள் பயிற்சி செயலமர்வானது மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. பிரதான மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.


குறித்த இரண்டு நாள் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் கலந்துகொண்டதுடன், குறித்த நிகழ்வில் மாவட்ட சாரண ஆணையாளர் வீ.பிரதீபன் உள்ளிட்ட மேலும் பலர் அதிதிகளாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

அத்தோடு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி.ச.கோணேஸ்வரன், மாவட்ட செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ச.அமிர்தநாயகி, விசேட தேவையுடைய கல்வி அலகுகள், நிறுவனங்களில் மாணவர்களை வழிப்படுத்தும், கல்வி கற்பிக்கும் அலுவலர்கள் உள்ளிட்ட மேலும் பல உத்தியோகத்தர்களும் குறித்த இரண்டு நாள் செயலமர்வுகளிலும் கலந்துகொண்டுள்ளனர்.

குறித்த செயலமர்வில் வளவாளர்களாக சாரண உதவி மாவட்ட ஆணையாளர்களான ஐ.கிறிஸ்டி, கே.குணரெட்ணம், ஏ.உதயகுமார், எஸ்.பற்றிக் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பயிற்றுவிப்பாளரான திருமதி.டியான் செல்வமலர், சாரண ஆசிரியரும் மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் மாவட்ட இணைப்பாளரும் விசேட தேவையுடைய ஆசிரியர்களுக்கான பயிற்றுவிப்பாளருமான பீ.டினேஸ் உள்ளிட்ட பயிற்றுவிப்பாளர்கள் சிறந்த முறையில் வளவாண்மை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

## சம்மாந்துறையில் தீயணைப்பு பயிற்சி முகாம்




(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனிபாவின் ஆலோசனையிலும் உதவி பிரதேச செயலாளர் யு.எம்.அஸ்லமின் வழிகாட்டுதலுக்கமைய சம்மாந்துறை அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு என்பவற்றின் ஏற்பாட்டில் அரச நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான தீயணைப்பு சம்பந்தமான செயலமர்வு நேற்று முன்தினம் (22) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றதோடு, இதற்கான களப்பயிற்சி சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் உள்ள எம்.பி.சி.எஸ் வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பான உதவிப் பணிப்பாளர் எம்.எ.சி.ரியாஸ், சம்மாந்துறை பிரதேசத்திற்குப் பொறுப்பான தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களான எம்.எஸ்.எம்.அஸாறுடீன் மற்றும் எம்.எ.எம்.நபீஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பான இராணுவ 241ஆவது கட்டளை பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் கல்முனை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இதற்கான முழு ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயம் கல்முனை கல்வி வலயத்தில் முதலிடம்


அதிபர்
ஐ.உபைதுல்லாஹ்


ஆசிரியர்
எம்.எல்.எம்.நௌஷாட்


ஆசிரியை
எம்.எச்.எஸ்.மூபீனா


ஏம்.ஐ.ஏ.மிஸ்ரப்
அபூபக்கர்-173


எச்.அறைஸ்
அப்துல்லா-171


எ.எஸ்.பாத்திமா
ஹன்ஸா-171


ஜே.இஸாம்
காமில்-168


முகம்மது வலீத்
பாத்திமா சுமையா-168


ஏம்.எப்.அனா
-168


ஆர்.எஸ்.அம்மார்
ஸாபி-166


ஏ.ஏ.எம்.அம்னான் பாரி
மௌலானா-165


ஏம்.ஏ.சபாஹத்
அஹமட்-163


ஏம்.பாத்திமா
டிலாரா-161


எம்.என்.அப்துல்லா
அர்ஹம்-158


ஏ.என்.அமிஷா
றயாஸி-157


ஏம்.எம்.அபிட்
மிக்டாப்-156


எஸ்.அபூசத்
ஐமன்-156


எம்.ஐ.சகி
அஹமட்-156



எம்.எம்.அஸ்ஹம்
-155


எம்.ஏ.டெஜாட்
அஹமட்-153


எம்.எம்.பாத்திமா
-152


எம்.ஜே.அமிஷா
அஹ்தா-149


எம்.எப்.அஹமட்
அம்ஹர்-1487


ஜே.ஆமிஷா
மதானி-147

(மருதமுனை நிருபர்)

2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயம் கல்முனை கல்வி வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்பாடசாலையில் 52 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 21 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திப்பெற்றுள்ளனர். ஏனைய எல்லா மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. மாணவன் எம்.ஐ.ஏ.மிஸ்ரப் அபூபக்கர் 173 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தில் உள்ளார்.

கல்முனை கல்வி வலயத்தில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயம் நூறு வீதம் சித்தி பெற்று வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதை பாராட்டும் வகையில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.அப்துல் றஹீம் ஆகியோர் அண்மையில் பாடசாலைக்கு வருகைதந்து அதிபர் ஐ.உபைதுல்லாஹ்வை பாராட்டியதுடன் கற்பித்த ஆசிரியர்களான எம்.எல்.எம்.நௌஷாட், எம்.எச்.எஸ்.மூபீனா ஆகியோரையும் பிரதி அதிபர்கள் மற்றும் உதவி அதிபர்களையும் பாராட்டியுள்மை குறிப்பிடத்தக்கது.

இங்கு அதிபர் ஐ.உபைதுல்லாஹ், ஆசிரியர்களான எம்.எல்.எம்.நௌஷாட், எம்.எச்.எஸ்.மூபீனா ஆகியோருடன் சித்திபெற்ற மாணவர்கள் 21 பேரையும் படங்களில் காணலாம்.

# நாட்டின் அபிவிருத்தி - மேம்பாட்டுக்கு ஆதரவை வழங்குமாறு ஜப்பானிய தூதுவரிடம் சஜித் கோரிக்கை





ஜப்பானிய தூதுவர் Mizukoshi Hideaki மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (22) நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் இராஜதந்திர உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நீண்டகால நெருங்கிய உறவு குறித்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர், இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்கும் நட்பு ரீதியான இருதரப்பு உறவின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

# எசிதிசி காப்புறுதிக்காக நூறு மில்லியன் ரூபா நிதி செலவு!

## தகவல் உரிமைச் சட்டத்தினூடான விண்ணப்பத்துக்கு ஊடக அமைச்சு பதில்

(றிப்திஅலி)

ஊடக அமைச்சினால் முதற்றடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான எசிதிசி இலவச காப்புறுதித் திட்டத்திற்காக அரசாங்கத்தினால் 100 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ள விடயம் தகவல் அறியும் விண்ணப்பத்தினூடாக தெரியவந்தது.

இக்காப்புறுதித் திட்டத்தினை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றலுடன் கடந்த டிசம்பர் முதலாம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்தத் திட்டம் தொடர்பில் ஊடக அமைச்சிற்கு கடந்த டிசம்பர் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் விண்ணப்பத்திற்கான பதில் கடந்த மார்ச் 11ஆம் திகதி அமைச்சின் அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் தகவலறியும் உரிமை ஆகியவற்றுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ.ஜயசுந்தரவினால் வழங்கப்பட்டது.

இதற்கமைய இந்த காப்புறுதித் திட்டத்திற்காக ஏறத்தாழ 4,044 விண்ணப்பங்கள் ஊடக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் 1,200 விண்ணப்பங்கள் ஊடகவியலாளர்களிடமிருந்து நேரடியாகவும், ஊடக நிறுவனங்களினால் ஊடகவியலாளர்கள் என உறுதிப்படுத்தப்பட்ட 2,000 விண்ணப்பங்களும், அரசாங்க தகவல் திணைக்களத்திலிருந்து 844 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதிலிருந்து 3,844 விண்ணப்பங்கள் எசிதிசி இலவச காப்புறுதித் திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 19 – 70 வயதுக்குட்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மாத்திரமே இந்த காப்புறுதி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஒரு வருட காலப் பகுதிக்கான இந்த காப்புறுதி திட்டத்திற்காக ஒரு ஊடகவியலாளருக்கு 25,935 ரூபா அரசாங்கத்தினால் செலவழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய, 9 கோடி 96 இலட்சத்து 94 ஆயிரத்து 140 ரூபா அரசாங்கத்தினால் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதி, தேசிய வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்வனவு செயன்முறையின் கீழ் இந்த காப்புறுதித் திட்டத்தினை செயற்படுத்துவதற்காக சொப்லொஜிக் லைப் காப்புறுதி நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

“ஊடகவியலாளர்களுக்கான சுயாதீன மற்றும் சிறந்த வேலைச் சூழலை உருவாக்கும் நோக்கில் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டமான ‘நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கின்’ கீழ் இந்த காப்புறுதித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது என ஊடக அமைச்சு மேலும் தெரிவித்தது.

இந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஊடகவியலாளரொருவர் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரையான உள்ளக மருத்துவ சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த காப்புறுதித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள ஊடகவியலாளரொருவர், இயற்கை அல்லது திடீர் மரணமடைந்தால், பயங்கரவாதம், வேலைநிறுத்தம், கலவரம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டால் ஐந்து இலட்சம் ரூபாவும், இயற்கை அல்லது திடீர் மரணத்தின் இறுதிச் சடங்கு செலவிற்காக 50,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

அத்துடன், சத்திரசிகிச்சை உள்ளிட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளுக்காக 1,50,000 ரூபாவும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறும்போது ஒரு நாளைக்கு 2,000 ரூபாவும் (ஆகக்கூடியது 30 நாட்களுக்கு மாத்திரம்) வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக மூக்குக்கண்ணாடி, பற்சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறல் போன்றவற்றிற்காக 20,000 ரூபா வரை வழங்கப்படுவதுடன், குழந்தை பிரசவத்திற்காக 1,35,000 ரூபாவும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, இந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் முதலாவது திடீர் மரணத்துக்கான காப்புறுதியை கொவிட் தொற்றுக்குள்ளாகி அண்மையில் உயிரிழந்த களுத்துறை, தொடங்கொடையைச் சேர்ந்த பிராந்திய ஊடகவியலாளர் சுனில் பத்தேவித்தானவின் பெயரில் அவரது மனைவியிடம் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இக்காப்புறுதி ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் கடந்த 16ஆம் திகதி உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுர்வேத மசாஜ் நிலையமென்ற போர்வையில் விபசார விடுதிகள் !

## சுற்றிவளைப்பில் ஒன்பது பேர் கைது



(அநுராதபுரம் செய்தியாளர்)

ஆயுர்வேத மசாஜ் நிலையமென்ற போர்வையில் விபசார விடுதிகளை நடத்திச்சென்ற நான்கு இடங்களை சுற்றிவளைத்து ஆண் ஒருவர் உட்பட ஒன்பது பேரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 21ஆம் திகதி இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாலை அநுராதபுரத்தின் மாத்தளை சந்தி, தஹய்யாகம, கல்கமுவ, தம்புள்ள மற்றும் யாழ்பாணம் சந்தி, புபுதுபுர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதவிய, கஹட்டகஸ்திகிலிய, கலன்பிந்துனுவெவ மற்றும் தமுத்தேகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 28 தொடக்கம் 42 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்பட்ட ஒன்பது பேரும் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கட்டார் தூதுவர் - வெளிநாட்டு அமைச்சர் சந்திப்பு



இலங்கைக்கும் கட்டாருக்கும் இடையிலான பன்முக உறவுகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மற்றும் கட்டாரின் தூதுவர் அல்-சொரூர் ஆகியோருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.


கட்டார் அரசின் இலங்கைக்கான தூதுவர் ஜாசிம் பின் ஜாபர் ஜே.பி. அல்-சொரூர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை கடந்த 21ஆம் திகதி கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, மனித உரிமைகள் பேரவையில் கட்டார் நல்கிய வலுவான ஆதரவையும் இலங்கைக்கான பச்சாதாப அணுகுமுறையையும் பாராட்டிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையில் நடைபெற்று வரும் நல்லிணக்கம் சார்ந்த முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். இலங்கைக்கும் கட்டாருக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பு, உறுதியான நட்புறவு மற்றும் பன்முக உறவுகளை வலுப்படுத்துவதற்கு அமைச்சர் பீரிஸ் மேலும் உறுதியளித்தார்.

இரு நாட்டு மக்களினதும் நலனுக்காக இலங்கையுடன் வலுவான பொருளாதார பங்காளித்துவத்தையும் நட்புறவையும் மேம்படுத்துவதற்கு கட்டார் உறுதியளிப்பதாக தூதுவர் சொரூர் உறுதியளித்தார்.

# யானை தாக்கி மூவர் காயங்களுக்குள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்ப்பு

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளம் நவகத்தேகம குருகெட்டியாவ பகுதியில் நேற்று முன்தினம் (22) காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளான நிலையில் படுகாயமடைந்த பெண்கள் மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் நிகழ்ந்த மரண வீடு ஒன்றுக்கு முச்சக்கரவண்டியில் மூன்று பெண்கள் பயணம் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது குறித்த மரண வீட்டுக்கு சில மீற்றர் தூரத்திலுள்ள காட்டுப்பகுதிக்குள் இருந்து வீதியை நோக்கிவந்த காட்டு யானை ஒன்று குறித்த முச்சக்கரவண்டி மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது முச்சக்கரவண்டியின் பின் பக்கமாக இருந்து பயணம் செய்த 16, 40 மற்றும் 70 வயதுடைய பெண்கள் மூவரே படுகாயமடைந்துள்ளனர்.

இவ்வாறு படுகாயமடைந்த மூவரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக ஆனமடுவ மற்றும் புத்தளம் வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த காட்டு யானை முச்சக்கரவண்டி மீது தாக்குதல் நடத்தியதற்கு முதல் நாள் 21ஆம் திகதி அந்தப் பகுதியிலுள்ள விவசாய நிலங்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

# மடுக்கரை காட்டுப்பகுதியில துப்பாக்கி மீட்பு

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வுத்துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (22) மடுக்கரை காட்டுப்பகுதியில் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வுத்துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸாருடன் இணைந்து மடுக்கரை கட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி விலங்கு வேட்டைக்காக பயன்படுத்துவது என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதுதொடர் பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




## கொலைச் சம்பவம்

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஹெரகொடெல்ல சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் நபரொருவர் கத்தியால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளான நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக கிடைத்த முறைப்பாட்டுக்கமைய கிராணட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வெஹெரகொடெல்ல, வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரிடம் ஒரு வாரத்துக்கு முன்னர் இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரினால் அடகுவைக்கப்பட்ட வானொலியை மீட்பதற்காக சென்றபோது ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## புதையல் தோண்டிய நால்வர் கைது

### மாங்குளம்

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனியச்சியங்குளம் பிரதேசத்தில் தனியார் இடமொன்றில் சிலர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக நேற்று முன்தினம் மாங்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்பேது சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டும் நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்களினால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் அவர் வருகை தந்திருந்த வேன் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாங்குளம், கிளிநொச்சி, ஹொரணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20 மற்றும் 40 வயதுடைய நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### மாத்தறை

மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்தவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாத்தறை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 08 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயின், 05 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 15 கிராம் ஹேஸ் போதைப்பொருள், 03 கைபேசிகள், ஒரு சிம் கார்ட், 145 கிராம் புகையிலை மற்றும் வியாபாரத்தினூடாக உழைக்கப்பட்டதாக கருதப்படும் 28 ஆயிரத்து 350 ரூபா பணம் என்பவற்றுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு மாத்தறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மெத்தவத்த, மாத்தறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ம 32 வயதுடைய சந்தேகநபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மாத்தறை சிறைச்சாலைக்கு போதைப்பொருள் விநியோகிப்பதாக கிடைத்த தகவல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த நபர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுன்ட்மேரி சந்திக்கு அருகில் கொழும்பு தெற்கு அபாயகர மருந்து சுற்றிவளைப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 12 கிராம் 130 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றினர்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 09 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரெர்ருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்டபு - 14ஐச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கடவத்தை

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கடவீதி பிரதேசத்தில் கடவத்தை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன்ட சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பேலியாகொடை

பேலியாகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவலோக்க பிரதேசத்தில் பேலியாகொடை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹுனுபிட்டிய பிரதேசத்தைச் சேரந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேலியாகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கடவத்தை

கடவத்தை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்ரோத வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### அங்குலானை

அங்குலானை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய அங்குலானை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயங்களுக்குள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபரொருவர் 06 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அஹ்குலானை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அங்குலானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 06 கோடா பீப்பாய்களுடன் சந்தேகநபரொருவர் கைது

### பமுனுகம

பமுனுகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் பமுனுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துராஜவெல வனப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 06 கோடா பீப்பாய்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜா- எல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர் .

# முன்னேற முடியாமல் திணறும் ரஷ்யா; கீவ்வின் புறநகரை மீட்டது உக்ரைன்

## தொடர் தாக்குதல்களால் உருக்குலையும் மரியுபோல்

உக்ரைன் போரில் தொடர்ந்து வேகமாக முன்னேற முடியாமல் ரஷ்யப் படை திணறுகிறது. பலமான எதிர் தாக்குதல் நடத்திவரும் உக்ரைன் இராணுவம், தலைநகர் கீவ்வின் புறநகரை ரஷ்யாவிடமிருந்து மீட்டுள்ளது.

ஆனாலும் மரியுபோல் நகரில் தொடர்ந்து கொலைவெறித் தாக்குதல் தொடர்ந்துகொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்தோடு வடமேற்கு புறநகர்ப் பகுதிகளான ஹோஸ்டோமெல் மற்றும் இர்பின் ஆகியவற்றை ரஷ்ய துருப்புகள் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**ஸெலென்ஸ்கிக்கு நேட்டோ அழைப்பு**

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பால் உக்ரைன் மக்கள் எதிர்கொள்ளும் மோசமான நிலைமை குறித்து நேரடியாகக் கேட்டறிய ஸெலென்ஸ்கிக்கு நேட்டோ திடீர் அழைப்பு விடுத்துள்ளது. நட்பு நாடுகளின் தலைவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, "இன்றைய நிலைவரப்படி, மரியுபோல் நகரத்தில் சுமார் 1,00,000 மக்கள் உள்ளனர். மனிதாபிமானமற்ற சூழ்நிலையில், ரஷ்யப் படையெடுப்பால் உணவு, தண்ணீர், மருந்து இல்லாமல் இருக்கின்றனர். தொடர்ச்சியான குண்டுவீச்சு மற்றும் குண்டுவெடிப்புக்கு மத்தியில் இவர்கள் உள்ளனர்" என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தனது சமூக ஊடக உரையில் தெரிவித்துள்ளார்.

**ரஷ்யா எச்சரிக்கை**

இந்நிலையில், ''உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் நாட்டுமக்களின் பாதுகாப்பு எங்களுக்கு முதன்மையானது. அணு ஆயுதம் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் அனைத்தையும் வாசியுங்கள். ரஷ்யா என்ற நாடு இந்த உலகத்தில் இருக்குமா, இருக்காதா என்ற உச்சபட்ச அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் அணு ஆயுதத்தை நாங்கள் பயன்படுத்துவோம்'' என்று ரஷ்யா தெரிவித்துள்ளது

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதை எதிர்த்து ரஷ்ய இராணுவம் நடத்திவரும் போர் இன்று 29ஆவது நாளாகவும் தொடர்கிறது. ஆரம்பத்தில் வேகமாக முன்னேறிய ரஷ்ய இராணுவம் தற்போது பல இடங்களில் முடங்கியுள்ளது. கெர்சன் நகரை கைப்பற்றிய பின்னர் தலைநகர் கீவ், கார்கிவ் ஆகிய 2 பெரிய நகரங்களை குறிவைத்து ரஷ்யப் படைகள் முன்னேறின. ஆனால், தற்போது 2 இடங்களிலும் ரஷ்ய இராணுவம் திணறி வருகிறது. குறிப்பாக, தலைநகர் கீவ்வின் புறநகர்களில் ஒன்றான மக்காரிவிலிருந்து ரஷ்யப் படைகள் வெளியேற்றப்பட்டுள்ளதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் தகவல் வெளியிட்டது.

நேற்றுமுன்தினம் அதிகாலை பயங்கரமான எதிர் தாக்குதல் மூலமாக அப்பகுதியிலிருந்த ரஷ்யப் படைகள் விரட்டி அடிக்கப்பட்டிருப்பதாகவும், மக்காரிவ் முழுமையாக உக்ரைன் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வடமேற்கிலிருந்து கீவ்வை சுற்றியுள்ள ரஷ்யப் படைகள் தலைநகருக்குள் நுழைவதை உக்ரைனால் தடுக்க முடியும். ஆனாலும், புச்சா, ஹோஸ்டோமெல் மற்றும் இர்பின் ஆகிய பிற புறநகர்களில் ரஷ்யா தொடர்ந்து தரைவழியாக தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய இராணுவம் பல இடங்களில் முடங்கி இருப்பதாகவும், அதன் செயல்பாடுகள் வேகமிழந்துள்ளதாகவும் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு உளவுத்தகவல்களும் தெரிவிக்கின்றன.











இதன் காரணமாக, ரஷ்யா தற்போது தரைவழி தாக்குதலுக்குப் பதிலாக அதிகளவில் வான் தாக்குதலை நடத்தி வருகிறது. கடந்த 24 மணிநேரத்தில் 300இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள் உக்ரைன் மீது ரஷ்யா ஏவியிருப்பதாகவும், படையெடுப்பு தொடங்கியதிலிருந்து தற்போதுவரை 1,100 ஏவுகணைகள் ஏவப்பட்டிருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த சில நாட்களில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் போலந்துக்கு செல்லவுள்ளார். அங்கு நேட்டோ நாடுகளுடன் அவர் பேச்சு நடத்தவிருப்பதால், அடுத்த சில நாட்களில் ரஷ்ய இராணுவம் தனது தாக்குதலை தீவிரப்படுத்தலாம் என அஞ்சப்படுகிறது. அதேசமயம், மரியுபோல் நகரில் தொடர்ந்து ரஷ்யாவின் கொலைவெறித் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. அங்கு பெரும்பாலான குடியிருப்புக் கட்டடங்கள் குண்டுவீசி தகர்க்கப்பட்டுள்ளதாகவும், வீதிகளில் மக்கள் சடலங்களாக கிடப்பதாகவும் தப்பி வந்தவர்கள் கண்ணீர் மல்க தெரிவிக்கின்றனர்.

**சின்னாப்பின்னமான மரியுபோல் தொழிற்சாலைகள்**

ரஷ்யப் படைகள் நிகழ்த்திவரும் வான் தாக்குதலால் மரியுபோல் நகர தொழிற்சாலைகள் வெடித்து சின்னாப்பின்னமாகும் ட்ரோன் காட்சிகளை உக்ரைன் அரசு வெளியிட்டுள்ளது.

துறைமுக நகரான மரியுபோலை 3 வாரங்களுக்கு மேலாக ரஷ்யப் படைகள் முற்றுகையிட்டுள்ளன.

ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடையுமாறு ரஷ்யா விதித்த கெடுவை உக்ரைன் இராணுவத்தினர் நிராகரித்தனர். இதையடுத்து, சர்வதேச வர்த்தகத்தில் மரியுபோல் நகரை இடம்பெறச் செய்வதில் முக்கிய பங்காற்றிய தொழிற்சாலைகள் மற்றும் தொழில்துறை நிறுவனங்கள் மீது ரஷ்யப் படைகள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன.

**கெர்சன் நகரில் 3 இலட்சம் பேர் உணவு - மருந்துகள் கிடைக்காமல் பரிதவிப்பு**

இதேவேளை, கெர்சன் நகரில் சுமார் 3 இலட்சம் பேர் உணவுக்கு தவிப்பதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இராணுவம் ஊரை விட்டு யாரையும் செல்ல விடாமல் தடுப்பு அமைத்திருப்பதால் கெர்சன் நகரம் மிகப்பெரிய பஞ்சத்தை எதிர் நோக்கியிருப்பதாகவும் உணவு, மருந்துகள் போன்றவற்றுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

மிகவும் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையிலும் ரஷ்ய இராணுவம் குடிமக்களை ஊரை விட்டு வெளியேற்ற மறுப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து ரஷ்ய தரப்பில் பதில் ஏதும் இல்லை.

அத்தோடு Marinka பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலால் குடியிருப்புகள், பாடசாலை கட்டடங்கள், தேவாலயங்கள் சிதைந்து சின்னாபின்னாமாகியுள்ளன.

**ஐ.நா அவசர கூட்டம்**

உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் அவசரகால சிறப்பு அமர்வு கூட்டம் நேற்று நடைபெறுகிறது.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா உட்பட 22 உறுப்புநாடுகள் எழுதிய கடிதத்தை தொடர்ந்து, ஐ.நா. சபையின் அவசரகால சிறப்பு கூட்டம் நேற்று நடைபெறும் என்றும், மனிதாபிமான பின்விளைவுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனவும் ஐ.நா. சபைத் தலைவர் அப்துல்லாஹ் ஷாகித் விடுத்துள்ள அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இச்சிறப்புக் கூட்டத்தில், போரை உடனே நிறுத்த ரஷ்யாவை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**35 இலட்சம் பேர் அகதிகள்**

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் உக்ரைனிலிருந்து 35 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என ஐ.நா. அகதிகள் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இது 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவின் மிக மோசமான அகதிகள் நெருக்கடிக்கு வழிவகுத்த வெளியேற்றத்தில் மற்றொரு மைல்கல்லைத் கடந்துள்ளது. அந்தவகையில் உக்ரைனிலிருந்து 35,57,245 பேர் வெளியேறியுள்ளனர். இவர்களில் 21,13,554 பேர் போலந்திலும் 5,43,308 பேர் ரோமானியாவிலும், 3,67,913 பேர் மோல்டோவாவிலும் 3,17,863 பேர் ஹங்கேரியிலும், 2,53,592 பேர் ஸ்லோவாக்கியாவிலும், 2,52,376 பேர் ரஷ்யாவிலும் மற்றும் 4,308 பேர் பெலாரஸிலும் தஞ்சமடைந்துள்ளனர். அத்தோடு 60 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேற முடியாமல் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அகதிகளுக்காக நோபல் பதக்கத்தை விற்கும் ரஷ்ய பத்திரிகையாளர்**

உக்ரைன் போரை பெரும்பாலான ரஷ்ய மக்கள் விரும்பவில்லை. இந்த விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் அந்நாட்டில் நடக்கின்றன. இந்நிலையில், உக்ரைன் அகதிகளுக்கு நிதி திரட்டுவதற்காக கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வென்ற ரஷ்ய பத்திரிகையாளர் டிமிட்ரி முராடோவ் தனது பதக்கத்தை ஏலம் விட இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஏல நிறுவனங்களிடம் அவர் பேசி வருகிறார். கடந்த ஆண்டு நோபல் பரிசு பெற்றதும் அதற்கான பரிசுத் தொகையை மொஸ்கோ நல்வாழ்வு மையம், முதுகுத்தண்டில் பிரச்சினையுள்ள குழந்தைகளைப் பராமரித்தல் உள்ளிட்ட காரணங்களுக்காக முராடோவ் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**நடுங்குகிறது இந்தியா:**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வொஷிங்டனில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், ''ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதில் குவாட் அமைப்பிலுள்ள ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் மிகவும் உறுதியாகவுள்ளன. ஆனால், ரஷ்யாமீது பொருளாதாரத் தடைகள் விதிக்கவும், புட்டினை எதிர்கொள்வதிலும் இந்தியா மட்டும் சற்று நடுங்குகிறது. நேட்டோவைப் பிளவுபடுத்த முடியும் என்று புட்டின் எண்ணிக்கொண்டிருந்தார்.

ஆனால், நேட்டோ ஒற்றுமையாக இருக்கும் என்று அவர் நினைக்கவில்லை'' என்றார்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தபோதிலும், ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் மசகு எண்ணெயை இந்தியா வாங்குகிறது. இதற்கு ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. அதேசமயம், ரஷ்யா மீது இந்தியா எந்த பொருளாதாரத் தடையும் விதிக்கவில்லை, ஐ.நா. வாக்கெடுப்பிலும் அந்நாட்டிற்கு எதிராக வாக்களிக்காமல் புறக்கணித்தமை குறிப்பிடத்தக்கது.

**பேச்சு நடத்தாத வரை போர் ஓய வாய்ப்பில்லை**

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெளியிட்ட வீடியோவில், ''நேட்டோவில் நாங்கள் சேர மாட்டோம், ரஷ்யப் படைகளை திரும்பப் பெறுவது, உக்ரைனின் பாதுகாப்பை உறுதிசெய்வது குறித்த ஒப்பந்தத்தை முடிவு செய்ய ரஷ்யாவுடன் பேச நாங்கள் தயாராக இருக்கிறோம். போர் நிறுத்தத்திற்குப் பின்னர் கிரிமியா, கிழக்கு டான்பாஸ் பகுதியின் நிலை மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்குவது குறித்து பேசத் தயார். புட்டினுடன் நேரடியாக பேச்சு நடத்தாத வரை இப்போர் ஓய வாய்ப்பில்லை'' என அவர் தெரிவித்துள்ளார்.

**ஹிட்லரிடம் தப்பித்தவர் புட்டினிடம் பலியான சோகம்**

உக்ரைனைச் சேர்ந்தவர் பொரிஸ் ரோமன்சென்கோ. இவர் உக்ரைனின் கார்கிவ் பகுதியில் வசித்து வந்தார். கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்ய இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் உயிரிழந்தார். இவர் ஜேர்மனியின் முன்னாள் சர்வாதிகாரி ஹிட்லர் நடத்திய 4 நாஜி வதை முகாம்களிலிருந்து தப்பியவர். தற்போது, 96ஆவது வயதில் ஜனாதிபதி புட்டின் நடத்திய தாக்குதலில் பலியாகியுள்ளார். ஜேர்மனி நாடாளுமன்றத்தில் ரோமன்சென்கோவின் மறைவுக்கு அனைத்து எம்.பிக்களும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

உலக செய்திகள்

# கடும் பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை: இந்தியாவுக்கு அகதிகளாக படையெடுக்கும் மக்கள்




இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மக்கள் தமிழகம் நோக்கி அகதிகளாக தொடங்கியுள்ளனர். இவ்வாறு நேற்றுமுன்தினம் முறையான அனுமதியின்றி இராமேஸ்வரம் தனுஷ்கோடிக்குச் சென்ற அறுவர் இந்திய கடலோர காவல்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடும் பொருளாதார வீழ்ச்சியால், இலங்கையில் உணவு, அத்தியாவசியப் பொருட்கள் விலை பன்மடங்கு உயர்ந்தது. வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அந்தவகையில் மன்னாரைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது 24), அவரது மனைவி மரியகிலாரி (வயது 20) மற்றும் அவரது நான்கு மாத குழந்தை நிசாஜ், தியுரி (வயது 28) எஸ்தர் (வயது 11), மோசஸ் (வயது 5) ஆகிய அறுவரும் பேசாலை பகுதியிலிருந்து சட்டவிரேதமாக படகில் இந்தியா நோக்கி புறப்பட்டுள்ளனர்.

அவர்களை தனுஷ்கோடியிலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்திலுள்ள 6ஆம் மணல் திட்டையில், படகோட்டிகள் இறக்கி விட்டு சென்றனர். மண்டபம் இந்திய கடலோர காவல் படையின், ஹோவர்கிராப்ட் கப்பலில் வீரர்கள் அவர்களை மீட்டு மண்டபத்திற்கு அழைத்து வந்தனர்.

இதுகுறித்து கஜேந்திரன் தெரிவிக்கையில், ''இலங்கையில் ஒரு நாள் கூலியாக 500 முதல் 800 ரூபாவரை கிடைக்கும். அரை கிலோ பால் மா 900 ரூபா, ஒரு கிலோ அரிசி 230 ரூபா, சமையல் கேஸ் சிலிண்டர் 4,200 ரூபா விற்கிறது. உணவுப்பொருட்களை வாங்க முடியாமல் பசியில் வாடினோம். வேறுவழியின்றி அகதியாக வந்தோம். இன்னும் பலர் அகதியாக இந்தியா வரவுள்ளனர்'' - என்றார்.

கஜேந்திரன் 2011 முதல் ஈரோடு, அரசலூர் அகதிகள் முகாமில் தங்கியிருந்த நிலையில், 2020இல் தனுஷ்கோடியிலிருந்து சட்டவிரோதமாக படகில் இலங்கைக்கு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வகட்சிக் கூட்டத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், அரசியல் ரீதியான கருத்துகளை தெரிவித்ததையடுத்து, இங்கு நாங்கள் அரசியல் பேசுவதற்கு வரவில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வை தேடி வந்துள்ளோம் - என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காரசாரமாக பதிலளித்தார்.

மத்திய வங்கி ஆளுநரின் கருத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலிடம் பகிரங்கமாக மன்னிப்பும் கோரினார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியபோது, இதுவரை அந்த அறிக்கை எங்களுக்கு கிடைக்கவில்லையென நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ பதிலளிக்க, இருவருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோரிக்கைகளுக்கு அமைய நேற்று (23) ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சர்வகட்சி மாநாடு இடம்பெற்றது.

இதில் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆரம்ப உரைக்குப் பின்னர் கருத்துகளை முன்வைத்த மத்திய வங்கி ஆளுநர், 2015 – 2019 ஆம் ஆண்டு வரையான ஆட்சிக்காலத்தில் 65 வீதம் கடன் சுமை அதிகரித்ததுடன், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு கடந்த அரசாங்கமும் காரணம் எனக் கூறினார்.

இதனையடுத்து, அதற்கு பதிலளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோரிக்கைக்கு அமையவே இந்த சர்வகட்சி மாநாடு நடத்தப்படுகின்றதுன. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவே என்னையும் அழைத்தார். பழைய நட்புக்காக என்னையும் வாருங்கள் என அழைத்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வை தேடியே நாங்கள் இங்கு வந்துள்ளோம். அதற்காக நாங்கள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அனைவரும் அறிந்ததே. மாறாக, அரசியல் கட்சிகளின் தவறுகளுக்கு யார் பொறுப்புக் கூறுவது என்பதை ஆராய்வதற்கு இங்கு வரவில்லை. மத்திய ஆளுநர் கூறியது போன்ற குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இங்கு வரவில்லை.

நாட்டின் நிலைமைக்கு கடந்த அரசாங்கத்தின் தவறே காரணம் என அவர் உரையை ஆரம்பிக்கும் போதே கூறியது குறித்து நான் கவலையடைகின்றேன். அதற்கு நான் பதிலளித்தால் என்ன நடக்கும். இறுதியில் விஜயன் இலங்கைக்கு வந்திருக்காவிட்டால், இங்கு பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது எனக் கூறுவார்கள்.

ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நீராகாரத்துக்கு மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கவில்லை. பெற்றோலும் இருந்தது. அது தொடர்பில் நான் இங்கு கூற விரும்பவில்லை. இது எங்களுடைய வெற்றியாகும். எதிர்க்கட்சிகள் சில இங்கு வரவில்லை. அவர்களை தோற்கடிப்பதற்காக நான் இங்குவரவில்லை. என்னுடைய கருத்துகளை முன்வைக்கவே இங்கு வந்தேன். ஆகவே, நாட்டின் பிரச்சினை குறித்து மாத்திரம் பேசுவோம் - என பதிலளித்தார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உங்களுடைய மனம் வலிக்கின்றதென்றால் அதற்கு நான் மன்னிப்பு கோருகின்றேன். திட்டங்கள் தொடர்பாக கூறும்போதே, மத்திய வங்கி ஆளுநர் அவ்வாறு கூறினார். மாறாக, யார் மீதும் குற்றம் சாட்டுவதற்காக அவர் அதனைக் கூறவில்லை.

கடந்த 74 வருடங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் சில சில தவறுகளாலேயே இன்று நாங்கள் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதற்கான பதிலை தேடுவதற்கு மாத்திரமே இங்கு வந்துள்ளோம். இங்குஅரசியல் பேசுவதற்காக, நாம் ஒன்று கூடவில்லை. பிரச்சினைகளுக்கு அனைவரும் கருத்துகளை கோருவதற்கே இங்கு வந்துள்ளோம் - என்றார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணிலுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நிதி விடயத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் அர்ப்பணிப்புகளை இதுவரை நாங்கள் காணவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் முழுமையான அறிக்கையை உங்களால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை.

அதனை இந்த வாரம் அல்லது அடுத்த வாரம் பெற்றுக்கொள்ள முடியுமா? பாகிஸ்தானின் அறிக்கை கூட வெளிவந்துள்ளது - என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, சர்வதேச நாணய நிதியத்தின் முழுமையான அறிக்கை இதுவரை எங்களுக்கு கிடைக்கவில்லையென பதிலளித்தார்.

அவர்கள் சமர்ப்பித்துள்ளதாக கூறியுள்ளனரே என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இல்லை. பொறுப்புடனே கூறுகின்றேன். இதுவரை எங்களுக்கு அந்த அறிக்கை கிடைக்கவில்லை என மீண்டும் நிதி அமைச்சர் கூறினார்.

அவ்வாறாயின் ஜனாதிபதி அவர்களை அழைத்து அறிக்கையை தருமாறு கோருங்கள் என ரணில் கூறினார்.

சர்வதேச நாணய நிதியம் வரைபையே எங்களுக்கு அனுப்பியுள்ளது. இனி கலந்துரையாடி இறுதி அறிக்கையை அனுப்புவார்கள் என நிதி அமைச்சர் கூறினார்.

வரைபு கிடைத்துள்ளதாக ஏற்றுக்கொள்கின்றீர்கள். இதுவரை ஏதும் கிடைக்கவில்லையெனக் கூறினீர்கள் என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

உங்களுக்கு வரைபு வேண்டுமா, அதனை எங்களால் தர முடியாது. அதில் நாங்கள் திருத்தங் களை மேற்கொண்டுள்ளோம் என நிதி அமைச்சர் கூறினார்.

எனக்கு வேண்டாம். அறிக்கையை நாடாளு மன்றத்தில் சமர்ப்பியுங்கள் என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.




# மதிப்பார்ந்த ஐ.பி.எல். வீரர்கள்







ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் கடந்த மாதம் நடைபெற்றது. அதில் உலக அளவிலிருந்து மொத்தம் 590 வீரர்கள் பங்கேற்ற நிலையில், இறுதியாக 204 வீரர்கள் மட்டும் 551 கோடி ரூபா செலவில் வாங்கப்பட்டார்கள். அதில் அதிக தொகைக்கு விலைபோன வீரராக இளம் இந்திய விக்கெட் கீப்பர் இஷான் கிஷான் 15.50 கோடிக்கு மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஒப்பந்தமாகி சாதனை படைத்தார். அதேபோல் அந்த ஏலத்தில் நிறைய இளம் வீரர்களை வாங்குவதற்கு அனைத்து அணிகளும் பல கோடி ரூபாவை செலவிட்டன.

இருப்பினும், இந்த ஏலத்தில் அதிக தொகைக்கு வாங்கப்பட்ட வீரர்களை அவர்களின் சராசரி வயதின் அடிப்படையில் பார்க்கும்போது மூத்த வீரர்கள்தான் அதிக தொகைக்கு வாங்கப்பட்டுள்ளார்கள்.

1. மெகா ஏலத்தில் 20 வயதிற்கும் குறைந்த வீரர்கள் 11 பேர் வாங்கப்பட்டார்கள். அதிகபட்சமாக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இளம் வீரர் தேவால்டு ப்ரேவிஸ் 3 கோடிகளுக்கு மும்பை இந்தியன்ஸ் அணிக்காக வாங்கப்பட்டார். அவர்களின் சராசரி சம்பளத் தொகை 0.94 கோடியாகும்.

2. 20 - 25 வயதுடைய வீரர்களில் 60 பேர் வாங்கப்பட்டனர். அதிகபட்சமாக டெல்லி அணிக்கு கெப்டனாக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்ட ரிஷப் பண்ட் 16 கோடிக்கு வாங்கப்பட்டார். இவர்களின் சராசரி சம்பளத் தொகை 2.87 கோடியாகும்.

3. 25 - 30 வயதிற்கு இடைப்பட்ட வீரர்கள் பிரிவில் அதிகபட்சமாக 86 வீரர்கள் வாங்கப்பட்டனர். அதிகபட்சமாக லக்னோ அணிக்கு கெப்டனாக வாங்கப்பட்ட இந்திய வீரர் கே.எல் ராகுல் 17 கோடிக்கு ஒப்பந்தமாகி சாதனை படைத்தார். இவர்களின் சராசரி சம்பளத் தொகை 3.65 கோடியாகும்.

4. 30 - 35 வயதுடைய வீரர்களில் 68 பேர் ஏலத்தின்போது வாங்கப்பட்டார்கள். அதிகபட்சமாக மும்பை அணியின் ரோகித் சர்மா மற்றும் சென்னை அணியின் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 16 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இவர்களின் சராசரி சம்பளத் தொகை 4.59 கோடியாகும்.

5. இறுதியாக 35 வயதிற்கு மேற்பட்ட மூத்த வீரர்களில் 12 பேர் வாங்கப்பட்டனர். அதில் அதிகபட்சமாக சென்னை அணியின் கெப்டன் எம்.எஸ். டோனி 12 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். இவர்களின் சராசரி சம்பளத் தொகை 5.50 கோடியாகும். மேற்குறிப்பிட்டுள்ள புள்ளிவிபரங்களிலிருந்து 35 வயதைக் கடந்த வீரர்கள் குறைந்தளவில் வாங்கப்பட்டாலும் அதிக சராசரி சம்பளத் தொகையை பெற்றுள்ளார்கள். மேலும் 20, 30, 35 வயது என வீரர்களின் வயது அதிகரிக்க அதிகரிக்க அவர்களுக்கு கொடுக்கப்படும் சராசரி சம்பளத் தொகையும் படிப்படியாக உச்சம் தொடுகிறது.

இதை வைத்து பார்க்கும்போது ஐ.பி.எல். தொடரில் திறமையின் அடிப்படையில் பல்வேறு வயதைக்கொண்ட வீரர்கள் வாங்கப்பட்டாலும் அவர்களின் உண்மையான மதிப்பு என்பது அவர்களின் வயது அதிகரிக்க அதிகரிக்க உயர்கிறது என்பதை இதிலிருந்து தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. இதன் வாயிலாக பழமைக்கு மதிப்பு அதிகம் என்ற பழமொழியின்படி இளம் வீரர்களுக்காக கோடிகளை கொட்டும் ஐ.பி.எல். தொடரும் விதிவிலக்கல்ல என்பது நிரூபணமாகிறது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஐ.பி.எல். ஆட தஸ்கினுக்கு அனுமதி மறுப்பு



ஐ.பி.எல். தொடரில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியில் விளையாடவிருந்த பங்களாதேஷ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் தஸ்கின் அஹமட்டிற்கு ஏமாற்றமே மிஞ்சியது.

கடந்த மாதம் நடைபெற்ற ஐ.பி.எல். மெகா ஏலத்தில் புதிய அணிகளில் ஒன்றான லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ், இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மார்க் வூட்டை ரூ. 7.5 கோடிக்கு வாங்கியது. சனிக்கிழமை ஆரம்பமாகும் தொடருக்காக லக்னோ அணி வீரர்கள் பயிற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையில், தற்போது நடைபெற்றுவரும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்தின் மார்க் வூட்டுக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து மார்க் வூட் காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார். அவருக்கு மாற்று வீரராக பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அஹமட் விளையாட லக்னோ நிர்வாகம் விரும்பியது. இதனைத் தொடர்ந்து தஸ்கினை அணுகியபோது அவர் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்கான தடையில்லாச் சான்றிதழை வழங்க பங்களாதேஷ் கிரிக்கெட் சபை மறுத்துவிட்டது. ஐ.பி.எல். போன்ற பணக்கார கிரிக்கெட் போட்டியில் விளையாட அனைத்து வீரர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிலையில், பங்களாதேஷ் அணி வீரருக்கு வாய்ப்பு கிடைத்தும் அதில் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் நிர்வாகி கூறியதாவது, இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுடனான தொடர் இருப்பதால் தஸ்கின் ஐ.பி.எல். தொடரில் கலந்துகொள்ள முடியவில்லை. இது குறித்து நாங்கள் தஸ்கினுடன் பேசினோம். அவர் முழு சூழ்நிலையையும் புரிந்துகொண்டார். ஐ.பி.எல். விளையாடவில்லை என்றும் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் இருப்பார் என்றும் பின்னர் வீடு திரும்புவார் என்றும் தஸ்கின் எங்களிடம் தெரிவித்தார் - என்றார்.

# கட்டாய ஓய்வை எதிர்நோக்கும் நடால்



டென்னிஸ் உலகின் நட்சத்திர வீரரான ஸ்பெயினைச் சேர்ந்த 35 வயதாகும் ரபேல் நடால் காயம் காரணமாக 4 முதல் 6 வாரம் ஓய்வெடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

நடப்பு சீசனில் தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித்து வந்த நடால், இண்டியன் வெல்ஸில் நடந்த பி.என்.பி. பாரிபாஸ் ஓபன் தொடரின் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸிடம் போராடி தோற்றார். இந்நிலையில், நடாலுக்கு விலா எலும்புமுறிவு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் 4 முதல் 6 வாரம் ஓய்வெடுப்பது அவசியம் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இது நல்ல செய்தி அல்ல. இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. சீசனை மிகவும் வெற்றிகரமாகத் தொடங்கிய நிலையில் இது என்னை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது என்று நடால் வருத்தத்துடன் கூறியுள்ளார்.



**மாவடிப்பள்ளி றோயல் முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமூக சேவையாளர் வை.பி.அஸ்மி பிரதம அதிதியாக கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.**

# பிரான்சிஸ் ஜோசப் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி




**(யாழ் நிருபர்)**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையில் நடந்த வணக்கத்திற்குரிய பிரான்சிஸ் ஜோசப் வெற்றிக்கிண்ண ரி-20 கிரிக்கெட் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றது.

புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி 14.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 48 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகப்படியாக எஸ். கீர்த்தனன் 16 ஓட்டங்களையும், ஏ.எவ்.டெஸ்வின் 10 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரர்களும் இரட்டை ஓட்டங்களை கூட பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் கே. சாம்தீசான் 3 விக்கெட்டுகளையும், எஸ். மதுசன், பா.பிரிந்தன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

49 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 18.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்து கிண்ணத்தை தனதாக்கியது. என். விஸ்னுகாந் 16 ஓட்டங்களையும், கௌசிகன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டியில் சகலதுறை வீரராக புனித பத்திரிசியார் கல்லூரி அணியின் எஸ். கீர்த்தனன் தெரிவுசெய்யப்பட்டார். ஆட்டநாயகனாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் என். விஷ்ணுகாந் தெரிவுசெய்யப்பட்டார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரு பாடசாலைகளின் பழைய மாணவர்களின் கிரிக்கெட் போட்டி நடைபெற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்

**24.03.2022 வியாழக்கிழமை பங்குனி 10**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: கேட்டை** மாலை 5.30 வரை
**மூலம்** மாலை 5.30 - 25.03.2022 மாலை 4.07 வரை
**யோகம்: வியதீபாதம்** காலை 7.29 - 25.03.2022 அதிகாலை 4.37 வரை
**திதி: அமர பட்ச ஸப்தமி** அ.கா. 2.16 - 25.03.2022 அதிகாலை 12.09 வரை
**முற்கரணம்: பத்திரை** அ.கா. 2.16 - பி.ப. 1.12
**பிற்கரணம்: பவம்** பி.ப. 1.12 - 25.03.2022 அதிகாலை 12.09 வரை

**சுப நேரங்கள்**
காலை 11.05 - 12.17
பிற்பகல் 1.17 - 1.47

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 1.48 - 3.19

**குளிகை காலம்**
காலை 9.15 - 10.46

**எமகண்ட காலம்**
காலை 6.13 - 7.44

**துர் முகூர்த்தம்**
காலை 10.16 - 11.04
மாலை 3.07 - 3.55

**லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** மாணவர்களுக்கு கல்வியில் சாதகமான நாளாக அமையலாம். சிலரின் மீது வைத்துள்ள நம்பிக்கையில் கவனம் தேவைப்படலாம். மரியாதை குறைவு உண்டாகலாம். வீட்டில் சில மாற்றங்கள் செய்யப்படலாம். இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்: பரணி நட்சத்திரத்திற்கு காலை 11.51 வரை கார்த்திகை நட்சத்திரம் பாதம் 1க்கு காலை11.51-மாலை5.30**

**ரிஷபம்:** காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். பணிகளில் ஏற்படும் அதிக வேலையை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளலாம். வணிகத்தில் நல்ல நிலைமை ஏற்படலாம்.நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கலாம்.
**சந்திராஷ்டமம்: கார்த்திகை நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு மாலை 5.30 - 25.03.2022 காலை 10.28 வரை**

**மிதுனம்:** பங்குதாரர் சம்பந்தப்பட்ட தொழில் வணிகத்தில் வெளிப்படை தன்மை மட்டுமே நல்லது. பணிக்கான நேர்முக தேர்வுகளில் மிக கடினமான கேள்வி கேட்கப்படலாம். வாழ்க்கைதுணையின்அன்பான ஆதரவு அதிகரிக்கலாம். பணியிடங்களில் சாதனைகளுக்கான பாராட்டு கிடைக்க பெறலாம். பிள்ளைகளின் சாதனைகளிலும்மகிழ்ச்சி உண்டாகலாம்.

**கடகம்:** பிள்ளைகளின் செயல்களில் கவனம் தேவைப்படலாம். இல்லச் சூழ்நிலை இனிமை தரலாம். காதலில் அன்பாக இருந்து மகிழ்ச்சி பெறலாம். அன்றாடவழக்கங்கள் ஒழுங்கு பெறும். வேலைத்தளங்களில் சாதகமான அனுபவங்கள் கிடைக்கலாம். மனப்பதற்றம் சிறிய அளவில் உண்டாகலாம்.

**சிம்மம்:** காணி/வீடு/சொத்து வாங்கும் முதலீடுகள் உருவாகலாம். எழுத்து தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு புதிய அனுபவம் கிடைக்கலாம். வாழ்க்கைத்துணையின் ஆதரவால் தன்னம்பிக்கை மேம்படும். பணிச்சுமை அதிகரிக்கலாம்.

**கன்னி:** திருமணத்திற்கு காத்திருப்போருக்கு திருமண வாய்ப்புகள் உண்டாகலாம். வருவாய் நல்ல நிலை பெறலாம். வேலைத்தளங்களில் நல்ல நிலை கிடைக்கலாம். இலக்கிய ஆர்வம் மேம்படும். பயணங்களில் எதிர்பார்த்த இலாபங்கள் கிடைக்காமல் இருக்கலாம்.

**துலாம்:** பிள்ளைகளின் செயல்களில் மகிழ்ச்சி கிடைக்கலாம். கடினமான பிரச்சினைகளை தீர்ப்பதில் வெற்றி கிடைக்கலாம். பங்குச்சந்தை லாபங்கள் கிடைக்க பெறலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களாலும் நன்மை கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** வணிகத்தில் உற்சாகம் நிறைந்த நாளாக அமையலாம். தம்பதியரிடையே பாசம் அதிகரிக்கலாம். பணியிடங்களில் உரிமை மேம்படலாம். பணிகளில் விவேகம் தேவைப்படலாம். மற்றவர்களுக்கு உதவும் குணத்தால் நற்பெயர் அதிகரிக்கலாம்.

**தனுசு:** கடன் கொடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது. அரசாங்கம் சம்பந்தப்பட்ட வேலைகள் தடைப்படலாம். சிலருக்கு நட்பு காதலாக மாற்றம் பெறலாம். தம்பதியரிடையே கருத்து வேறுபாடுகள் மறந்திருப்பது நன்மை. இறைவணக்கம் தேவை.

**மகரம்:** வருவாய்க்கான புதிய நல்ல நிலை தோன்றலாம். இன்று புதுமையான ஒன்றை செய்யும் முயற்சி உண்டாகலாம். பண நிலை சீராகும். வேலைத்தளங்களில் பணித்திறன் பாராட்டப்படும்.

**கும்பம்:** இல்லத்தில் அமைதி நிலவும். வேலைத்தளங்களில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம். தொழில் பிரச்சினைகள் நீங்க துவங்கலாம். ஆன்மீக தலங்களுக்கு செல்லும் நிலை உருவாகலாம். ஆவண விடயங்களில் கவனம் தேவைப்படலாம்.

**மீனம்:** எதிர்பாராத பண வருவாய் மகிழ்ச்சியை உருவாக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவைப்படலாம். கடன் கிடைக்கலாம். புதிய முடிவுகளில் கவனம் தேவைப்படலாம். இறைதியானம் நன்மை.

# இளம் வயதில் ஓய்வை அறிவித்த நம்பர் வன் வீராங்கனை



டென்னிஸ் உலகின் நம்பர் வன் வீராங்கனையான அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஆஷ்லி பார்ட்டி தொடர்ந்து பல வெற்றிகளை குவித்துவந்த நிலையில் தனது 25ஆவது வயதில் நேற்று ஓய்வு முடிவை அறிவித்து அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

இது குறித்து பேசிய அவர், தனக்கு தனிப்பட்ட முறையில் பல கனவுகள் உள்ளதாகவும் ஆனால், உலகம் முழுவதும் சுற்றி தனது குடும்பத்தையும் சொந்த ஊரையும் பிரிந்து இருக்க தன்னால் முடியாது என்றும் கூறியுள்ளார்.

மேலும் டென்னிஸ் விளையாட்டை தான் மிகவும் நேசிப்பதாகவும் தனது வாழ்வில் அது என்றும் ஓர் அங்கமாக இருக்கும் என்றும் கூறியுள்ள அவர், தனது வாழ்வின் அடுத்த பகுதியை ஒரு விளையாட்டு வீராங்கனையாக இல்லாமல் ஒரு சாதாரண நபராக அனுபவிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

ஆஷ்லி பார்ட்டி சுமார் 121 வாரங்களாக உலகின் நம்பர் வன் வீராங்கனையாக திகழ்ந்துள்ளார். குறுகிய காலத்தில் 15 சம்பியன்ஷிப் பட்டங்களை வென்றுள்ள அவர், ஆஸி. ஓபன் டென்னிஸ், 3 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள், 2021 விம்பிள்டன், 2019 பிரஞ்ச் ஓபன் டென்னிஸ் கிண்ணம் ஆகியவற்றை வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7